# ஆண்டறிக்கை

# 2020

## இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

## இலங்கை

## நோக்கு

சகலருக்கும் நம்பகமான, பாராபட்சமற்ற, சுகந்திரமான, பயனர் நேயமுள்ள மற்றும் அணுகக் கூடிய நீதித் துறை முறைமையை அடைவதற்கு நீதிபதிகளின் தொழில் வாண்மை நிபுணத்துவத்தை மேம்படுத்தி, அவர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக நீதிபதிகளுக்கு நீதித் துறை சார்ந்த பயிற்சிகளை வழங்கியவாறும், மிகவும் உயர் மட்ட பயிற்சிகளையும் ஆய்வு வசதிகளையும் வழங்கியவாறும் மிகச் சிறந்த நிறுவகமாக செயற்படுதல்.

## பணி

பல தரப்பட்ட திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளின் ஊடாக நீதித் துறை அலுவலகர்களின் தொழில் ரீதியான நிபுணத்துவத்தையும், நீதித் தரத்தையும் மேம்படுத்துவதற்கு உயர் மட்டத்திலான அறிவையும், திறனையும் நீதித் துறை அலுவலகர்களுக்கு வழங்குவதன் மூலம் நிறுவகத்தின் நோக்கை அடைய செயற்படுவோம்.

அதற்கேற்ப இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பின்வரும் இலக்குகளை அடைவதற்கு பங்களிப்பு வழங்கியவாறு, சுகந்திரமாக தமது பணிகளை நிறைவேற்றிக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் செயற்படுகிறது. அந்த இலக்குகளாவன.

- நீதித் துறை அலுவலகருக்கு தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குதல்.
- ஆய்வுகள், அறிக்கை வெளியீடு மற்றும் தொழிநுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் நீதித் துறை அலுவலகர்ளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- நீதி மற்றும் சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பில் நீதித் துறை அலுவலகர்களின் கருத்துக்களைப் பரிமாற்ற வசதிகளை வழங்குதல்.
- நீதித் துறை அலுவலகர்களின் தொழில் ரீதியான நிபுணத்துவத்தை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் அறிவையும், திறனையும் விருத்தி செய்வதை நோக்காக் கொண்டு மாநாடுகள், சம்மேளனங்கள், கருத்தரங்குகள் மற்றும் பணிப்பட்டறைகள் ஒழுங்கு செய்தலும், அவற்றை நடத்துதலும்.
- தாமதங்களை குறைக்கும் போது வழக்கு முகாமைத்துவம் மற்றும் வழக்கு போக்கு முகாமைத்துவத்தின் மூலம் உயர் நலன்களை தரும் அத்தியாயங்களையும், நடைமுறைகளையும் அடைவதற்கான வழிகாட்டல்களை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குதல்:
- நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டுக்கான பல்வேறு அம்சங்கள் குறித்தான ஆய்வுப் பணிகளை மேற் கொள்ளுதல்:
- நீதிபதிகளை இலக்காகக் கொண்டு நூலக மற்றும் இணையத் தள அடிப்படையிலான கல்வி வசதிகளை வழங்குதல் மற்றும் சட்டம் சார்ந்த தகவல்களையும், விடயங்களையும் பிரபலப்படுத்தல்.:
- சர்வதேச நீதி நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகளைப் பேணிச் செல்லல்:
- நீதி அமைப்பினுள் மக்கள் பொறுப்புக்களையும், நம்பிக்கையையும் பாதுகாப்பதற்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சலுகை வழங்குதல் குறித்தான சட்ட மறுசீரமைப்புக்கு பங்களிப்பு வழங்குதல்:
- நீதியை நிலைநாட்டுதல் மற்றும் நீதிக்கான அணுகல் குறித்தான தேசிய கொள்கைகள் மற்றும் நடைமுறை விதிகள் போன்றவற்றை மேம்படுத்தி அமுல்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குதல்.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கு……………………………………………………………………………………… | 01 |
| பணி…………………………………………………………………………………………. | 01-02 |
| உள்ளடக்கம்………………………………………………………………………….... | 03 |
| 1. கௌரவ தவிசாளரின் செய்தி ………………………………………………………. | 04 |
| 2. கௌரவ பணிப்பாளரின் செய்தி | 05 |
| 3. அறிமுகம் ……………………………………………………………………………….. | 06-17 |
| 4. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவம் மற்றும் அலுவலக குழாம் | 18-19 |
| 5. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதியம்………………………………………. | 20 |
| 6. பயிற்சித் திட்டங்கள்………………………………………………………………. | 20-25 |
| 7. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயலாற்றுகை………………………………… | 36-27 |
| 8. 2020.01.01 ஆந் திகதி முதல் 2020.12.31 ஆந் திகதி வரையான கால எல்லைக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகள்………………………………………… | 28-43 |
| 9. முக்கியமான கணக்குக் கோட்பாடுகள்………………………………………………... | 44 |
| 10. 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிதி செயலாற்றுகை தொடர்பான அறிக்கை…. | 45 |
| 11. 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான நிதி செயலாற்றுகை தொடர்பான அறிக்கை………………………………………………… | 46-47 |
| 12. 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான நடைமுறை நாணயப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை…………………………………………… | 48-49 |
| 13. 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான தேறிய சொத்துக்களின் மாற்றம் தொடர்பான அறிக்கை……………………………………… | 50 |
| 14. 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான நிதி அறிக்கை குறிப்பு……………………………………………………………………………… | 53-60 |
| 15. சவால்கள்……………………………………………………………………………… | 61 |
| 16. நன்றி……………………………………………………………………………….. | 62 |
| 1 ஆம் அத்தியாயம் : கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் கணக்காய்வு அறிக்கை | 63-67 |

## தவிசாளரின் செய்தி

பிரதம நீதியரசர் உத்தியோகபூர்வ மனை
உயர் நீதிமன்றம்
கொழும்பு 12
இலங்கை
தொலைநகல் : + + 94(0) 11 2437534
தொலைபேசி : + + 94(0) 11 24221342

2022 ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதியன்று

### இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் தவிசாளர் கௌரவ பிரதம நீதியரசரின் செய்தி

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2020 ஆண்டறிக்கையை முன்வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். 2020 ஆம் ஆண்டினுள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் பற்றிய கண்ணோட்டத்தை இந்த ஆண்டறிக்கை வழங்குகின்றது. உலகின் ஏனைய நாடுகளில் உள்ள பல நிறுவனங்கள் சந்தித்ததைப் போலவே இலங்கை நீதிபதிகள் நிறுவகமும் கொவிட் - 19 தொற்றுப் பரவலின் பின்விளைவுகளை எதிர் கொண்டு தனது பணிகளையும், கடமைகளையும் நிறைவேற்றிச் செல்லும் முயற்சியில் திழைத்தது. இத் தொற்றுப் பரவலின் காரணமாக இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது பணிகளையும், கடமைகளையும் மெய்நிகர் உலகில் ஆற்றிச் செல்ல நேர்ந்ததுடன், இது எமது வாழ்வின் அன்றாட செயற்பாடுகளின் புதியதொர் இயல்பு நிலையாக மாறியது. இக்கால கட்டத்திலும் MS பயன்படுத்தி தமது தொழிலுக்கான பழக்கப்படுத்தல் பயிற்சி நிகழ்ச்சிகளை இடைவிடாது தொடர்ச்சியாக நடத்திச் சென்றதை அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்வதற்கு இதனை ஒரு வாய்ப்பாகக் கொள்கிறேன். குறிப்பாக பயிற்சி நிகழ்ச்சிகளை நிகழ்நிலை தொழிநுட்பத்தின் ஊடாக நடத்துவதற்கு ஆர்வமுடன் பணியாற்றிய இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர், ஆலோசகர்கள் மற்றும் அதன் அலுவலக பணியாளர்கள் ஆகியோரை இங்கு நன்றியுடன் நினைவு கூருகிறேன். இவ்வாறான கடும் தொற்று பரவல் நிலவிய காலத்திலும் கூட எமது இலக்கை அடைவதற்காக இந்த பாரிய பொறுப்புக்களை இடையறாது நிறைவேற்றிய இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை மக்களுக்கு நியாயமான மற்றும் வினைத்திறனான முறையில் நீதியை நிலைநாட்டுவதற்குரிய நீதித் துறை பதவியணியினரின் திறனையும், அறிவையும் தொடர்ந்தும் விருத்தி செய்வதற்கு பணியாற்றுதல் எமது வாக்குறுதியாகவும், அர்ப்பணிப்பாகவும் மாறியுள்ளது.

ஒப்பமிடப்பட்டது / கையொப்பம்

ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய
பிரதம நீதியரசர்

## இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கௌரவ பணிப்பாளரின் கருத்து தெரிவிப்பு

நீதிபதிகள் அலுவலகம்,
இலங்கை உயர் நீதிமன்றம்,
கொழும்பு 12.

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான ஆண்டறிக்கை மற்றும் இறுதிக் கணக்காய்வு கணக்குகள் ஆகியவற்றை முன்வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள், நீதித் துறை அலுவலகர் மற்றும் 2020 ஆம் ஆண்டில் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நீதித் துறை பதவியணியினர் ஆகியோருக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவச் சபையின் மேற்பார்வையின் கீழ் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் பல பயிற்சி நிகழ்ச்சிகளும், ஆய்வு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டதுடன், அவற்றில் பெரும்பாலானவை முழு உலகையும் பீடித்துக் கொண்ட கொவிட் - 19 தொற்றுப் பரவலின் காரணமாக நிகழ்நிலை தொழில்நுட்பத்தின் வாயிலாக நடத்தப்பட்டன. கொவிட் - 19 தொற்றுப் பரவிய ஆரம்ப காலங்களில், புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நீதித் துறை பதவியணியினருக்கு நிகழ்நிலை தொழிநுட்பத்தைப் பழக்கப்படுத்தி மிகவும் பயனுள்ள பயிற்சிப் பாடநெறிகளை எம்மால் நடத்த முடிந்தது.

அந் நிகழ்ச்சிகளில் மனித உரிமைகள் சட்டம், ஆட்கடத்தல் எதிர்ப்புச் சம்பவங்கள் மற்றும் நிதித் தூய்மையாக்கல் அடிப்படையாகக் கொண்ட அபாயகரமான போதைப் பொருட்கள் போன்றவற்றின் கீழ் நடத்தப்பட்ட உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள் உள்ளடங்கும். அவற்றைத் தவிர, கணனிக் குற்றங்கள் மற்றும் இலத்திரனியல் ஆதாரங்கள், சிறுவர் தொடர்பான வழக்குகளுக்கு தீர்ப்பதற்கான மிகச் சிறந்த நடைமுறைகள், வழிகாட்டல்கள் மற்றும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கான பயிற்சித் தேவைப்பாட்டு பகுப்பாய்வு போன்ற விடயப் பரப்புக்களின் கீழ் செயலமர்வுகளும், குழு கலந்துரையாடல்களும் நடைபெற்றன. குறித்த தலைப்பு தொடர்பில் நீதிபதிகளின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான சில செயலமர்வுகள், மாதிரி வழக்கு விசாரணைகள், மாநாடுகள் மற்றும் குழு கலந்துரையாடல்கள் வடிவில் ஏற்பாடு செய்யப்பட்டன. இது தவிர, குறிப்பாக மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கென பல வெளிநாட்டு செயலமர்வுகளும் நடத்தப்பட்டன.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் இலக்கை அடைவதற்காக தமது பங்களிப்பு, தொலைநோக்கு, உறுதிப்பாடு மற்றும் வழிகாட்டல்கள் போன்றவற்றை வழங்கிய இந்த நிறுவனத்தின் தவிசாளர் கௌரவ பிரதம நீதியரசருக்கும், இந்த நிறுவகத்தின் பணிப்பாளர் சபையின் கௌரவ உறுப்பினர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதற்கான வாய்ப்பாக இதனைக் கொள்கிறேன்.

மேலும், இந்த இலக்குகளை அடைவதற்கு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர், நீதி அமைச்சின் செயலாளர், அதன் அலுவலக குழுவினர் குறிப்பாக நீதி அமைச்சின் நிருவாக மற்றும் கணக்கு அலுவல்களுக்குப் பொறுப்பான அலுவலகர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் வழங்கிய பங்களிப்புக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, கடும் அர்ப்பணிப்புடனும், ஊக்கமுடனும் சேவையாற்றி ஒப்பற்ற பங்களிப்பு வழங்கிய இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் அலுவலக குழுவுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பமிடப்பட்டது
நீதிபதி எல். டீ. பீ. தெஹிதெணிய,
உயர் நீதிமன்ற நீதிபதி,
இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளர்.

# அறிமுகம்

இலங்கை பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட “1985 இல 46 ஐக் கொண்ட இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் சட்டத்தின்” மூலம் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தாபிக்கப்பட்டது. நீதிபதிகள் நிறுவகத்தைத் தாபித்தமைக்கும், அதனுடன் தொடர்புடைய துணையான விடயங்களுக்கும் இந்தச் சட்டத்தில் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

## இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நோக்கங்கள்

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தைத் தாபித்தமைக்கான நோக்கங்கள் பின்வருமாறு.

1. நீதி மற்றும் சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பில் நீதித் துறை அலுவலகர்கள் சுகந்திரமாக தமது கருத்துக்களையும் யோசனைகளையும் பரிமாறிக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் :

2. நீதித் துறை உத்தியோகத்தர்களின் தொழில் வாண்மை திறனை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் அறிவையும், திறமைகளையும் விருத்தி செய்யும் எண்ணத்துடன் கூட்டங்களையும், மாநாடுகளையும், சொற்பொழிவுகளையும், பணிப்பட்டறைகளையும், கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்தல் மற்றும் நடத்துதல்.

3. நீதியை நிறைவேற்றுவது குறித்தான பல தரப்பட்ட பிரிவுகள் தொடர்பில் பயிறிசிகளையும், ஆய்வு பாடநெறிகளையும் தயாரித்தலும், நடத்துதலும்.

4. நீதித் துறை உத்தியோகத்தர்களுக்கு நூலக வசதிகளையும், ஏனைய கல்வி உபகரணங்களையும் வழங்குதல்.

## இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வரலாற்றுப் பின்னணி

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் சட்டக் கல்வி மற்றும் பயிற்சி, அவர்களது தொழில் தரங்களை மேம்படுத்துவதில், இலங்கை நீதிபதிகள் நிறுவகம் இலங்கையினுள் தனியான ஒரேயொரு சட்ட நிறுவகமாக தனித்துவமாக விளங்குகிறது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தை தாபிப்தற்கு முன்னர் புதிய நியமனங்களைப் பெற்ற இலங்கை நீதித் துறை பதவியணியினருக்கு சட்டம் சார்ந்த விடயங்களை பயிலுவதற்கான வாய்ப்புக்களை வழங்கும் போது, தீர்ப்பளிக்கும் நீதிபதிக்கு அருகில் சில வாரங்கள் அமர்ந்திருந்து நீதிமன்றத்தின் பணிகளை அவதானித்தல் போன்றவையே அவர்கள் கடமையைப் பொறுப்பேற்பதற்கு முன் கிடைத்த ஒரேயொரு பயிற்சியாக இருந்தது. நீதியை நிலைநாட்டும் நீதிபதிகள் தமது நீதித் துறை வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு முன்பு மட்டுமன்றி, அவர்களின் வாழ்நாள் முழுவதும் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நாம் திடமாக நம்புகிறோம். அதற்கமைய சகல மட்டங்களிலும் உள்ள நீதித் துறை பதவியணியினருக்கு முறையானவாறு பயிற்சிகள் வழங்கும் விதத்தில் அமைந்த முழுமையான மற்றும் தொடர்ச்சியான பயிற்சி நிறுவகத்தை திட்டமிட்டு தாபிக்க வேண்டும் என்பது விரைவில் உணரப்பட்டது.

அன்றைய நீதி அமைச்சின் செயலாளர் பதவியை வகித்த திரு பீ. பீ. ஹேரத் நீதிபதிகளுக்கான நிறுவகத்தை தாபித்தல் தொடர்பான கருத்தை முதல் முறையாக கலந்துரையாடலுக்கு உட்படுத்தினார். பிரான்சில் இவ்வாறானதொரு அமைப்பு இயங்குவதை நேரில் கண்ட அவர், 1982 ஆம் ஆண்டில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நாளிதழ் ஒன்றுக்கு அது பற்றிய செய்திக் கட்டுரை ஒன்றை எழுதினார். ஆயினும் வழமை போல இது பற்றி எதுவும் நடைபெறவில்லை என்பதோடு, இந்த விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்ட போதிலும், அதற்கு செவிசாய்க்கவில்லை. நீதி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி, நீதிபதிகள் நிறுவகத்தைத் தாபிப்பதற்காக முதற் தடவையாக கலந்துரையாடிய திரு பீ. பீ. ஹேரத் அதனை தாபிப்பதற்கு ஊக்கமளிக்கும் நிரந்தரமான, பிரதான சக்தியாகச் செயற்பட்டதுடன், நிறுவகத்தின் பிரதான வலுவான பங்காளரானார்.

அதற்கமைய நீதிபதிகளுக்கு சேவை ரீதியான சட்டக் கல்வியை தொடர்ந்து வழங்குவதற்கு நீதிபதிகளுக்கான நிறுவகம் ஒன்றை தாபிப்பதற்காக செயற்பட்டதுடன், கௌரவ நீதியரசர் திரு ஜே. எப். ஏ. சோசா அவர்கள் 1984 மே மாதம் 02 ஆம் திகதி இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நிதி சிக்கல் குறித்து ஆசியா மன்றத்தின் வதிவிட பிரதிநிதி திரு ஜோன் குயே அவர்களுடன் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டது. நிறுவனத்தைத் தாபிப்பதற்கு அதற்குப் பொருத்தமான வளாகத்தை கண்டுபிடித்துத் தேர்ந்தெடுப்பதே அதன் முதலாவது பணியாக அமைந்தது. அதற்கமைய பல்வேறு மாற்றுச் சூழல்கள் இனங்காணப்பட்ட பின்னர், இலங்கை மன்றத்தின் துணை மனை ஒரு வருட காலத்துக்கு வாடகைக்கு எடுக்கப்பட்டதுடன், அதற்குத் தேவையான மரத் தளபாடங்களையும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டன. இவை அனைத்தும் ஆசியா மன்றத்தின் நிதி அனுசரணையின் ஊடாக மேற் கொள்ளப்பட்டன. அதன் பின் சில மாநாடுகள் நடத்தப்பட்ட போதிலும், அரச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை நிலவியதால், சந்தர்ப்பத்துக்கமைய மட்டுமே நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அமைச்சரவை பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்ட போதிலும், அரச அங்கீகாரத்தைப் பெற்ற முடியுமா என்பது தெளிவான விடயமாக இருக்கவில்லை.

உயர் மட்டத்திலான சில விரிவுரைகள் நடத்தப்பட்டதுடன், அந்த உரைகள் மிகவும் உயர் மட்டத்திலான தரத்தைக் கொண்டதாக அமைந்தது. இந்த விரிவுரைகளில் கௌரவ பிரதம நீதியரசர் திரு கிலிபெர்ட் வொலஸ் சிறப்பு விரிவுரையாளராக பங்கேற்றதுடன், அவர் சட்ட முறைமை மற்றும் நீதித் துறை நிர்வாகம் தொடர்பான ஆசிய மன்றத்தின் மூத்த ஆலோசகராகவும், ஐக்கிய குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிப் பேரவையில் ஒன்பதாவது புகழ்பெற்ற நீதிபதியும் ஆவார்.

நீதிபதிகள் நிறுவகத்தின் ஆரம்பம் அவ்வாறாக அமைந்தது. அதிசிறந்த புத்திஜீவியாகவும், தனித்துவமான சிந்தனையாளரான கௌரவ கலாநிதி ஏ. ஆர். பீ. அமரசிங்க அவர்கள் நிறுவகத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தயாராக தோள் கொடுத்து உதவ முன்வந்தமை பெரும் பேறாகும். நீதிபதிகள் நிறுவகத்தின் தோற்றம் தொடர்பாக அவரது பெயர் வலியுறுத்தப்பட வேண்டும். காரணம் அவரின் முயற்சியின் விளைவாக 1985 நவம்பர் மாதம் 20 ஆம் திகதியாக பதிவில் குறிப்பிடப்படும் 1985 இல 46 ஐக் கொண்ட இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. 1986 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அமுலில் வரும் வகையில் கௌரவ நீதிபதி சோசா அவர்கள் நிறுவகத்தின் பணிப்பாளராக முறையாக நியமனம் பெற்றார். அன்றிலிருந்து இலங்கை நீதிபதிகள் நிறுவகம் மாநாடுகள், பணிப்பட்டறைகள், பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் போன்றவற்றின் ஊடாக நீதித் துறை பதவியணியினருக்கு இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் சேவை ஆற்றியுள்ளது. மேலும் 1990 ஆம் ஆண்டில் நீதிபதி கௌரவ கே. விக்னராஜா அவர்கள் நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும், திரு பீ. நெவில் ஏ த சில்வா பிரதம நீதியரசர் செயலகத்தில் இருந்து இளைப்பாறிச் சென்றவுடன் நிறுவகத்தின் செயலாளராகவும், இணைந்து கௌரவ நீதிபதி சோசா அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியமையும் முக்கியமாக பாராட்டப்பட வேண்டியதாகும்.

உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளிடையே நியமிக்கப்படும் மூத்த இரு நீதிபதிகள் மற்றும் பதவி அதிகாரத்தால் கௌரவ நீதியரசர் தவிசாளராக பதவி வகிக்கும் நிர்வாக சபையினரால் நீதிபதிகள் நிறுவகம் நிருவாகிக்கப்படுகிறது. நிறுவகத்தின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் நிருவாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் கௌரவ எஸ். ஷர்வானந்த இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிருவாக சபையின் முதலாவது தவிசாளர் ஆவார். அதன் பின்னர் நீதியரசர் கௌரவ பாரிந்த ரணசிங்க நிருவாக சபையின் தவிசாளர் ஆனார். அவர் நீதித் துறையின் உறுப்பினர் ஆவதுடன், நிறுவக நடவடிக்கைகளிலும் தனது நேர்மையான சிறந்த அர்ப்பணிப்புடனும் செயற்பட்டார். அவர் நிறுவகத்தின் சகல மாநாடுகளிலும், செயற்பாடுகளிலும் கலந்து கொண்டார். அவர் மாநாடுகளில் சட்டத்தரணிகளுடனும், அளவையாளர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தியதுடன், கௌரவ நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் இடையில் நல்லுறவை கட்டியெழுப்புவதற்கு மேற்பார்வைக் குழுவையும் நிறுவினார். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினுள் அவரது நினைவுகள் என்றும் நீங்கா இடம் பிடிக்கும்.

அதன் பின், முகாமைத்துவ சபையின் உறுப்பினராக அந்நாளில் கடமையாற்றிய பிரதம நீதியரசர் கௌரவ தம்பையா முகாமைத்துவ சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டதுடன், அவர் நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கும், அபிவிருத்திக்கும் மிகவும் பாராட்டத் தக்க முக்கிய பங்களிப்பை ஆற்றினார். அன்றை நீதித் துறை சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றிய திரு ஏ. எஸ். விஜேதுங்க நிறுவகத்தின் நோக்கங்களை அடைவதற்கு கடும் முயற்சி எடுத்து சிறப்பாக பணியாற்றினார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக கடமையாற்றிய காலத்தில், அவர் நிறுவகத்துக்கு ஆற்றிய பணிகள் இன்றும் புகழ்பெற்றவை. அவரின் பின் திரு லால் பீரிஸ் நியமிக்கப்பட்டார். அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய திரு வீ. எஸ். விதானாச்சியாலும் நிறுவகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கு அயராது பணியாற்றினார்.

நிறுவகத்தின் நலனில் ஆர்வத்தையும், அக்கறையையும் காட்டியதுடன், அவர்கள் நிறுவகத்தின் வலுவான தூண்களாக அமைவது நிச்சயம்.

இதற்கு முன்னர் திரு ஜோன் குயர் மற்றும் அதன் பின் திரு நிக் லென்க்டன் ஆகியோர் தலைமை தாங்கிய ஆசியா மன்றத்துக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது நன்றிகளை இங்கே தெரிவித்துக் கொள்கிறது. நிறுவகத்தின் தற்போதைய சிறந்த நிலைபேறான இருப்புக்கு ஆசிய மன்றம் வழங்கிய அளப்பறிய ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவுகூருகிறது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தை முதன்மையான நிறுவனமாகக் கருத வேண்டியதுடன், மன்றத்தின் அர்ப்பணிப்புக்கான அர்த்தம் இங்கு தெளிவாக வெளிப்படுவதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அதன் பின் அளுத்கடையில் அமைந்துள்ள உயர் நீதிமன்ற வளாகத்தினுள் நிறுவப்பட்டதுடன், அதன் பாராமரிப்புச் செலவினங்களை அரசு ஏற்றது. இலங்கை நீதிபதிகள் நிறுவகம் வழக்குகளை விசாரணை செய்யும் நீதிபதிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், நீதித் துறை சார்ந்த விடயங்களில் மேன்முறையீட்டு அதிகாரம் உள்ள நீதிமன்றங்களின் மூத்த நீதிபதிகளின் நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவத்தையும், நிருவாக விடயங்களில் நீதி அமைச்சின் மூத்த உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுள்ளது. 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கலிபோனியாவில் அமைந்துள்ள சட்டக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி போல் எம். லீ அவர்களை இலங்கைக்கு அழைத்து நீதித் துறை விடயங்கள் தொடர்பில் விரிவான கல்விப் பயிற்சி முறை ஒன்றை இரண்டு வருட கால முன்மாதிரி அடிப்படையில் வழங்குவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்திக்கு இயன்றவாறு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் விசேட சிறப்பியல்புகள் பின்வருமாறு.

1. இலங்கை நீதித் துறையில் புதிதாக நியமிக்கப்படும் நீதித் துறை பதவியணியினரின் சட்ட அறிவையும், திறன்களையும் இற்றைப்படுத்தி, மேம்படுத்தியவாறு எதிர்காலத்திலும் தமது கல்வியை தொடர அரையாண்டு தொழிற் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தல் ;

2. மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் புதிதாக பதவி உயர்வு பெறும் நீதபதிகளுக்கு தனித் தனியாக மாதாந்தம் சேவை அடிப்படையிலான ஆரம்ப நிகழ்ச்சித் திட்டங்களை தொடருதல்;

3. புதிய சட்ட போக்குகள், பொது மற்றும் சிறப்பு நீதித் துறை சிக்கல்களை தீர்த்தல் மற்றும் உள்நாட்டு நீதித் துறை அத்தியாயங்களையும், நடைமுறைகளையும் தரப்படுத்துவதற்கு நவீன தேவைகளுக்குப் பொருத்தமானவாறு முறையே நீதவான் நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், மேல் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்காக வருடாந்த சேவைகள் அடிப்படையிலான கல்வி மாநாடுகளை தொடர்ந்து நடத்துதல்;

4. நீதி முகாமைத்துவம், தகவல் தொடர்பு திறன், பெண்களுக்கும், சிறுபான்மை இனத்தவர்களுக்கும் நீதிமன்றத்தில் நீதியை நிறைவேற்றுதல், நீதித் துறை விடயம் சார்ந்த ஆய்வுகளில் முடிவு எடுத்தல் மற்றும் சட்டவியல், மனித நேயம், குடும்பச் சட்டம், சிறுவர் நீதிச் சட்டம், குற்றவியல் சட்டம் குடியியல் சட்டம், நன்னடத்தை மற்றும் உளநலச் சட்டம், காணிகள் மற்றும் பிரிவிடுதல் சட்டம் ஆகியவற்றுடன் மனித உரிமைகள் தொடர்பான சட்டம் போன்ற மிக முக்கியமான நீதித் துறை விடயங்களில் காலத்துக்குப் பொருத்தமாக ஒரு வார உயர் சட்டக் கல்வி நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தல்;

5. செவிப்புல மற்றும் காட்சிப்புல ரீதியாக பதிவு செய்யப்பட்ட கல்வி விடயங்கள் (நீதிமன்றங்களில், நீதிபதிகளுக்கான அடிப்படை நூலக வசதிகள்) உள்ளிட்ட நீதித் துறைக்கான விரிவான நாளாந்த வேலைக் கருவிகளை (தீர்ப்பு நூல்கள், வாய்மொழி மற்றும் எழுத்துருவிலான சோதனைப் பட்டியல், கையேடுகள் மற்றும் பிற குறிப்பு நூல்கள்) அறிமுகப்படுத்தல்;

6. நீதிபதி ஆசிரியர்களுக்காக வினைத்திறனான சட்ட பீட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தல்;

7. நீதித் துறை இயக்கப்பாட்டு செயல்முறைகளை மேம்படுத்துவதற்கும், நீதிமன்றங்களில் வழக்கு தாமதத்தை தவிர்ப்பதற்கும், நீதிபதிகளுக்கான நெறிமுறை நடத்தை பேணுதல் மற்றும் பொதுப் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளும் ஆராய்ச்சிகள், காணிகள் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்தல்;

8. மேற் கூறப்பட்டுள்ள நீதித் துறை முறைமையை செயற்படுத்துவதற்கு பொருத்தமான வகுப்பறைகள், அலுவலகங்கள், செவிப்புல, காட்சிப்புல உபகரணங்கள் மற்றும் ஏனைய வளங்களுடன் கூடிய சட்டப் பீடத்தை திட்டமிடல், வாடகைக்கு எடுப்பதற்கான இயலுமையை கருத்திற் கொள்ளுதல் அல்லது எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்;

நீதியின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் நீதி அதிகாரத்தை வலுப்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாக அமைகிறது. ஏனெனில் நியாயமாகவும், துரிதமாகவும், வினைத்திறனான முறையிலும் நீதியை நிலைநாட்டுவதற்கு நீதித் துறை உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வகிப்பாகத்தையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு அவர்கள் சிறந்தவர்களாக இருத்தல் அவசியமாகும். இந்த இலக்கை அடைவதற்கு புதிதாக நியமனம் பெற்ற நீதிபதிகள் தங்கள் கடமையைப் பொறுப்பேற்கும் போது முறையான பயிற்சி ஒன்றை பெற்றிருப்பது அவசியமாவதுடன், அவர்கள் தாம் வகிக்கும் பதவிகளில் தத்தமது பணிக் காலம் முழுவதும் தமது கல்வியை இடைவிடாது தொடர்வது அவசியமாகும். நீதியின் தரம் நீதிபதிகள் தரத்தில் தங்கியுள்ளது. சட்டம் இருந்தால் மட்டும் போதாது. நிலைநாட்டும் நீதி அதை நிலைநாட்டும் நீதிபதிகளைப் போலவே சிறப்பாக இருத்தல் வேண்டும். சட்ட அதிகாரத்தை அர்ப்பணிப்புடன் கடைப்பிடிக்கும் அனைத்து உலக நாடுகளும் இந் நிலையை உணர்ந்து, நீதிபதிகளுக்கான பயிற்றுவிப்புக்கள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்திச் செல்கின்றன.

இந்த காலகட்டத்தில் உயர் நீதிமன்ற வளாகத்தில் இல 1308 ஐக் கொண்ட அறையில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நிறுவப்பட்டது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதியான கௌரவ கே. விக்னராஜா அவர்கள் நிறுவகத்தின் பிரதி பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், அவர் கௌரவ நீதிபதி ஜே. எப். ஏ. சோசா அவர்களுடன் இணைந்து நீதித் துறை பதவியணியினருக்கு சேவை ரீதியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தினார். கௌரவ கே. விக்னராஜா அவர்கள் நிறுவகத்தில் தமது பதவியில் இருந்து விலகிய உடனே மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதியான கௌரவ எஸ். ஜே. டீ. த எஸ். விஜேரத்ன அவர்கள் 1986 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பிரதி பணிப்பாளராக கடமையைப் பொறுப்பேற்றார். அதன் பின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதி கௌரவ பீ. எச். கே. குலதிலக அவர்கள் 2002 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்தின் உறுப்பினராகவும், மேல் நீதிமன்ற நீதிபதியாகவும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் பணியாற்றி அவர் பெற்றிருந்த அறிவையும் அனுபவத்தையும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பெரும் சொத்தாக அமைந்ததுடன், அவர் நீதித் துறையின் பதவியணியினருக்கு ஆசானாகவும் விளங்கினார்.

பிரதம நீதியரசரான கௌரவ ஜீ. பீ. எஸ். த சில்வா அவர்கள் இளைப்பாறியதன் பின் , கௌரவ நீதியரசர் சரத் என். சில்வா அவர்கள் 2000 ஆம் ஆண்டில், பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். பிரதம நீதியரசர் கௌரவ சரத் என். சில்வா அவர்கள் நீதிபதிகள் நிறுவகத்தின் வளர்ச்சிக்கு பலமாக தூணாக விளங்கினார். கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தை நீதிபதிகள் நிறுவகமாக உபயோகிப்பதற்கு அனுமதியைத் தெரிவித்ததுடன், நீதித் துறை பதவியணியினருக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்திச் செல்வதற்கு நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்புத் திட்டத்தின் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்கினார்.

உலக வங்கியின் ஒத்துழைப்புடன் நீதி, சட்ட மறுசீரமைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒத்துழைப்புடன் நீதித் துறை பதவியணியினருக்கு வெளிநாட்டு புலமைப் பரிசில் முறையை ஆரம்பிப்பதற்கு வழிகோலினார். வினைத்திறனாக மற்றும் நிபுணத்துவத்துடன் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கு நவீன நீதித் துறை அமைப்பை நிறுவுவதே இந்தத் திட்டத்தின் ஒரு நோக்கமாக அமைந்தது. வர்த்தக சட்டத்தின் மீது விசேட கவனத்தைச் செலுத்தி புதிதாக நியமனம் பெற்ற மற்றும் சேவை ரீதியான நீதிபதிகள் ஆகிய இருபகுதியினரின் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு நிதி வழங்குதல் மற்றும் தீர்ப்பளிக்கும் பயிற்சி நிகழ்ச்சிகளை மேம்படுத்தல் இத் திட்டத்தின் ஒருங்கிணைந்த அங்கமாக அமைந்தது. இந்த இலக்கை அடைவதற்கு ஒரு வருடத்துக்கு மூன்று நீதித் துறை உறுப்பினர்களுக்கு எல். எல். எம் பட்டத்தைப் பெறுவதற்கான முழு கல்விச் செலவினத்தையும், அதாவது மேலதிக வகுப்புக்கள், பிரயாணச் செலவுகள், தங்குமிட வசதிகள் மற்றும் நியாயமான வாழ்க்கைக் கொடுப்பனவுக்கான நிதியை இத் திட்டம் வழங்கியது.

பிரதம நீதியரசர் மாண்புமிகு சரத் என். சில்வா அவர்கள் கொழும்பு 07 விஜேராம மாவத்தையில் அமைந்த அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நீதித் துறை பதவியணியினர் மற்றும் நீதிமன்ற அலுவலகர் குழாம் ஆகியோருக்கு கணனிப் பயிற்சி நிகழ்ச்சி ஒன்றை அந்நாளில் ஆரம்பித்து வைத்தார். இக் காலகட்டத்தில் நீதி அமைச்சு புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணித்ததுடன், நீதிபதிகள் நிறுவகத்துக்கு இந்தக் கட்டிடத்தின் 5 ஆம் மாடியையும், 4 ஆம் மாடியின் ஒரு பகுதியை நீதிபதிகளின் தங்குமிடத்துக்காகவும் ஒதுக்கியது. பிரதம நீதியரசர் மாண்புமிகு சரத் என். சில்வா அவர்கள் நிறுவகத்துக்கு வழங்கிய அனுசரணை குறித்து நிறுவகம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் பிரதம நீதியரசர் பதவி வகித்த 2000 முதல் 2009 ஆம் ஆண்டினுள் நிறுவகத்தின் பணிகளில் நேர்மையான சேவையை ஆற்றினார். இலங்கை நீதிபதிகள் நிறுவகம் எப்போதும் அவரை கௌரவத்துடன் நினைவு கூறும்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஆரம்ப பணிப்பாளரான நீதிபதி கௌரவ ஜே. எப். ஏ. சோசா அவர்கள் நிறுவகத்தின் பணிப்பாளாராக 21 வருடங்கள் பெறுமதிமிக்க சேவையின் வழங்கி பின், 2008 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுச் சென்றார். அவர் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கும், நீதித் துறை பதவியணியினருக்கும் பாராட்டத்தக்க சேவைகளை ஆற்றியதுடன், அவரது பணிகள் என்றும் எமது நினைவில் நீங்கா இடத்தைப் பிடிக்கும்.

கௌரவ நீதிபதி ஜே. எப். ஏ. சோசா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றதன் பின் உயர் நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதியான கௌரவ நிஷ்ஷங்க உதலாகம அவர்கள் 2008 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், அவர் 2011 ஆம் ஆண்டு வரை நிறுவகத்தின் பணிப்பாளராக தனது கடமைகளை ஆற்றினார். இக் காலகட்டத்தினுள் கௌரவ நீதபதி நிஷ்ஷங்க உதலாகம அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முதலாவது இணையத் தளத்தை ஆரம்பித்து வைத்தார். உயர் நீதிமன்றத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றும் மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஒத்துழைப்புடன் நீதித் துறை பதவியணியினருக்கு குற்றவியல், குடியியல், வர்த்தக விடயங்கள், வழக்கு முகாமைத்துவம் மற்றும் சச்சரவுகளைத் தீர்க்கும் மாற்று முறை போன்ற 10 இக்கு மேற்பட்ட பாடநெறி நூல்களை வெளியிட்டதுடன், கௌரவ நீதிபதி ஜே. எப். ஏ. சோசா அவர்கள், கௌரவ நீதிபதி உதலாகம அவர்கள் மற்றும் கௌரவ நீதிபதி பீ. எச். ஏ. குலதிலக அவர்கள் போன்றோர் மிகவும் பயனுள்ள பணிகளை ஆற்றினர். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்காக நீங்கள் ஆற்றிய பணிகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதற்கு இதனை வாய்ப்பாகக் கொள்கிறோம்.

பிரதம நீதியரசர் கௌரவ சரத் என். சில்வா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்ற பின், நீதிபதி கௌரவ அஷோக டி சில்வா அவர்கள் 2009 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். அவரது பதவிக் காலத்தில் நீதிபதி கௌரவ பீ. எச். ஏ. குலதிலக அவர்கள் 2009 ஆம் ஆண்டில், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2011 ஆம் ஆண்டில் அவர் உயர் நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற கௌரவ நீதிபதி டீ. பீ. வீரசூரிய அவர்களுடன் இணை – பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். கௌரவ நீதிபதி டி. பீ. வீரசூரிய அவர்களும், கௌரவ நீதிபதி கௌரவ பீ. எச். கே. குலதிலக அவர்களும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கு

அரும் பெரும் சேவைகளை ஆற்றியதுடன், அவர்கள் மீயுயர் நீதிமன்றத்தில் கடமையாற்றி பெற்ற விலைமதிப்பற்ற அனுபவங்களையும், சிறந்த அறிவையும் பயன்படுத்தி குடியியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் கடமையாற்றும் நீதிபதிகளை பயிற்றுவிப்பதற்கு அரும் பெரும் பணிகளை ஆற்றினர். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கும் நீதிமன்றங்களிலும் அவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டி அவர்களைக் கௌரவிக்கும் முகமாக இலங்கை நீதிபதிகள் நிறுவகம் இதனை சிறந்த வாய்ப்பாக்கக் கருதுகிறது. அவர்கள் என்றும் எமது ஆசான்களாக நன்றியுடன் எமது நினைவில் கொள்ளப்பட வேண்டும்.

பிரதம நீதியரசர் கௌரவ அஷோக சில்வா அவர்கள் நீதித் துறை விடயங்கள் தொடர்பான கல்வி மற்றும் பயிற்சிகளில் விசேட கவனத்தைச் செலுத்தினார். பிரதம நீதியரசர் கௌரவ அஷோக த சில்வா அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் உதவியுடன் பயிற்சி நிகழ்ச்சிகளையும், பயிற்சிகளில் உள்ளடங்கங்களை மீளமைக்கவும் செயற்பட்டார். மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித் துறை அலுவலகர் போன்றோருக்கு பல பணிப் பட்டறைகளை நடத்தினார். அவர் பல மாநாடுகளில் தனிப்பட்ட ரீதியில் கலந்து கொண்டு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகளுக்கு உதவி வழங்கினார். இக் காலகட்டத்தில் பல பயிற்சி கையேடுகள் வெளியிடப்பட்டதுடன், நீதித் துறை பயிற்சிகளை நடத்திச் செல்வதற்கு வளவாளர்களாக சம காலத்தில் பணியாற்றிய நீதிபதிகள் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகள் போன்றோரின் சேவைகளைப் பெற்று கொள்வதற்கும் பிரதம நீதியரசர் கௌரவ அஷோக சில்வா அவர்கள் செயற்பட்டார். பயிற்சி தேவைப்படும் நீதிபதிகளுக்குப் பயிற்சி அளிக்க மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அழைப்பு விடுக்குமாறு கௌரவ பிரதம நீதியரசர் அஷோக சில்வா நிறுவகத்துக்கு ஆலோசனை வழங்கினார்.

இதே நேரத்தில் நீதி அமைச்சின் புதிய கட்டிடத்தில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நிறுவப்பட்டது. புதிய கேட்போர் கூடம், கணனி ஆய்வகம், நூலகம் மற்றும் நீதிபதிகளுக்கான விடுதிகளுடன் கூடிய இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தை தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் அந்நாள் நீதி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய திரு சுகத கம்லத்துக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது. ஆகையால் நீதித் துறை பதவியணியினருக்கு புதிய நீதிபதிகள் நிறுவகத்தை வழங்குவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளை நிறுவனம் எப்போதும் தனது நினைவில் கொள்ளும். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்குத் தேவையான கணனி ஆய்வகம், கேட்போர் கூடம், நூலகம் மற்றும் மரத் தளபாடங்கள் உள்ளிட்ட சகல உபகரணங்களையும் வழங்க செயற்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது கௌரவத்தைத் தெரிவித்துக் கொள்கிறது,

பிரதம நீதியரசர் கௌரவ அஷோக டி சில்வா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்ற பின், நீதிபதி ஷிராணி ஏ. பண்டாரநாயக்க அம்மையார் 2011 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதும், அவர் நிறுவகத்தின் முகாமைத்துவச் சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டார். டீ. பீ. வீரசூரிய அவர்களும், கௌரவ நீதிபதி பீ. எச். கே. குலதிலக அவர்களும் 2012 மே மாதத்தின் போது நிறுவகத்தின் இணை பணிப்பாளர்களாக பணியாற்றினர். அதன் பின் நிறுவகத்தின் முகாமைத்துவ சபைக்கு மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்த கௌரவ ருவன் பிரனாந்து அவர்கள் 2012 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், நீதவானாகக் கடமையாற்றிய மஹீ விஜேவீர நிறுவனத்தின் கல்வி இணைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பிரதம நீதியரசர் கௌரவ ஷிராணி ஏ. பண்டாரநாயக்க அம்மையார் தலைமை வகித்த முகாமைத்துவச் சபை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான பங்களிப்பை வழங்கியது. இதன் போது நீதித் துறை சேவைகள் ஆணைக்குழுவின் கணக்காளர் பதில் கடமை அடிப்படையில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கணக்காளராக நியமிக்கப்பட்டார். அத்துடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகளையும், கடமைகளையும் வினைத்திறனாக ஆற்றுவதற்கு நீதித் துறை பதிவாளர் மற்றும் மூன்று முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அந்நாளில் நீதி அமைச்சில் கடமையாற்றிய கனிஷ்ட அலுவலகர் இருவரை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்த அந்நாள் நீதி அமைச்சின் செயலாளர் பதவியை

வகித்த திரு சுகத கம்லத்துக்கு இங்கே நிறுவனத்தின் சார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். 2012 ஆம் ஆண்டில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஒருங்கிணைந்த திட்டமும், செயற்பாட்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டதுடன், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தால் நிதி ஒழுங்குவிதிகளுக்கு கீழ் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான அதிகாரத்தை வெளிக்காட்டுவதற்கான அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தால் தமது ஆண்டறிக்கை பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டது. அதேபோலவே இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஊழியர் எண்ணிக்கையும் தயாரிக்கப்பட்டதுடன், நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சிகள், தொழிலாளர் நியாய சபைகளின் தவிசாளர்கள் வரை விரிவுபடுத்தப்பட்டன. நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நவீன பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் ஆய்வு வசதிகளுடன் கூடிய நிறுவகமாக மாற்றமடைவதற்கு இக் காலகட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சிகளும், மீளமைப்பு செய்வதும் ஆரம்பிக்கப்பட்டதுடன், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வசதிகளும் நவீனமயமாக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

இக் காலகட்டத்தில் நிறுவகத்தின் செயலகத்தை தாபிப்பதற்கு பொருத்தமான இடத்தை தேடிப் பிடித்தல், பயிற்சி நிகழ்ச்சிகளை விரிவுபடுத்தல், *Wi-Fi* வசதிகளுக்காக நன்கு வடிவமைக்கப்பட்ட கணனி ஆய்வகத்தில் இணைய நூலகம் ஒன்றைத் தாபிப்பதற்கு நூலக வசதிகளை மேம்படுத்தல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) உதவியுடன் இணையத் தளத்தை மீள செயற்படுத்தல், மீயுயர் நீதிமன்றங்களில் அறிக்கையிடப்படாத வழக்குத் தீர்ப்புக்களை சேகரித்தல், நீதிபதிகளுக்கு நிறுவகத்தினுள் விடுதி வசதிகளை வழங்குதல், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வேண்டுகோளுக்கு இணங்க நீதித் துறை பதவியணியினருக்கு பயிற்சி கையேடுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல், தேவையான அலுவலகர் குழுவை ஆட்சேர்ப்பு செய்தல், கணனி செர்வர் போன்ற முக்கியமான பௌதீக வளங்களை விநியோகித்தல், கணனி அச்சு பிரதிகள் மற்றும் நிழற் பிரதிகள் போன்ற வசதிகளை ஆரம்பித்தல், அரச நிருவாக மற்றும் நிதி சுற்றறிக்கைகளின் பரிந்துரைகளுக்கு அமைய நிருவாக விடயங்களில் இணைந்து செயற்படுவதற்கு முமுன்னுரிமை அளிக்கப்பட்டது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் இது தொடர்பில் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களிடம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இது தொடர்பாக ஆற்றிய சேவைகளுக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கல்வி இணைப்பாளர் திரு மஹி விஜேவீரவுக்கும், நிறுவகத்தின் பதிவாளராகக் கடமையாற்றிய திரு ஞானபால உள்ளிட்ட நிறுவகத்தின் அனைத்து அலுவலகர்களுக்கும் தமது உண்மையான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

2013 ஜனவரி மாதத்தில் கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் இலங்கை பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதை அடுத்து, அவர் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டார். பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிகளுக்கு தனது உண்மையான அர்ப்பணிப்பையும், பங்களிப்பையும் வெளிப்படுத்தி, இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வளர்ச்சிக்கு அயராது சேவையாற்றிய பலமிக்க தூணாக விளங்கினார். 2013 ஏப்பிரல் மாதம் நீதி அமைச்சின் புதிய கட்டிடத்தில் புதிய பகுதி ஒன்றில் நிறுவக அலுவலகத்தை நடத்திச் செல்வதற்கான வாய்ப்பு வழங்கியதையிட்டு, அதற்காக பங்களிப்பு நல்கிய பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் அலுவலகமாகப் பயன்படுத்துவதற்கு நீதி அமைச்சின் புதிய கட்டிடத்தின் ஒரு பகுதியை வழங்குவதற்கு அந்நாளில் நீதி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய திருமதி கமலினி டி சில்வாவுக்கு நிறுவனம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது. பிரமத நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் அலுவலகர் எண்ணிக்கையை 09 முதல் 23 வரை அதிகரித்ததுடன், நீதிபதிகளுடன் தமது அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கு பல்வேறு துறைகளில் நிபுணத்துவத்தை பெற்றிருந்த வல்லுனர்களையும், தொழில் ரீதியாக தகைமை பெற்றிருந்த நீதித் துறையின் வல்லுனர், அறிஞர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நீதிபதிகளுடன் உரையாற்றுவதற்கு வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் நீதித் துறையில் நிபுணர்கள் ஆகியோருக்கு தவறாது அழைப்பு விடுப்பதற்கு பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் மறக்கவில்லை. அதனூடாக அவர்களின் அறிவும்,

அனுபவமும் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அளித்தார். இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட பல மாநாடுகள், விரிவுரைகள் மற்றும் பல தரப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் தனிப்பட்ட ரீதியில் கலந்து கொண்டதுடன், அவரின் அறிவையும், அனுபவத்தையும் நீதிபதிகளுடன் பகிர்ந்து கொண்டார்.

இந்தக் காலகட்டத்தில் ஆதாரச் சட்டம் மற்றும் குடியியல் சட்டம் ஆகியவற்றின் மறுசீரமைப்புத் தொடர்பில் தீர்ப்புக் கையேட்டை இற்றைப்படுத்துவதற்கு இரு குழுக்களை நியமித்தார். தற்போது கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் புகழ்பெற்ற மற்றும் அர்ப்பணிப்புள்ள வெளிநாட்டு நீதிபதிகளின் உதவியுடன் வழக்கு முகாமைத்துவ துறையில் குடியியல் நீதி அமைப்புத் தொடர்பான சட்ட மறுசீரமைப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். குடியியல் நீதி அமைப்புக்குத் தேவையான சட்ட மறுசீரமைப்பை கொண்டு வருவது தொடர்பில் பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் அவர்கள் காட்டிய முயற்சிக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் பதவியேற்ற பின் குறிப்பாக வழக்கு முகாமைத்துவம், நீதித் துறை முகாமைத்துவம், நீதித் துறையின் நெறிமுறைகள் ஆகியவை தொடர்பில் இருநூறுக்கும் மேற்பட்ட நீதிபதிகளுக்கு மலேசியா, இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வெளிநாட்டு பயிற்சிகளை வழங்கியுள்ளார். இக் காலகட்டத்தில் நிறுவகத்தின் கல்வி இணைப்பாளராக திரு லக்மால் விக்கிரமசூரியவின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அவர் நீதிபதிகளுக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்கான வாய்ப்புக்களை தேடித் தருவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன், நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஏற்பாடு செய்தார். ஆகையால் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்காக வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஏற்பாடு செய்யும் போதும், ஒருங்கிணைக்கும் போதும் அவர் காட்டிய அர்ப்பணிப்பும், சேவைக்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அவருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதற்கான வாய்ப்பாக்கிக் கொள்கிறது. பிரதம நீதியரசர் கௌரவ மொகான் பீரிஸ் தனது பதவிக் காலத்தினுள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு துரிதமான வளர்ச்சி கிட்டியதை பெருமையுடன் நினைவு கூருதல் வேண்டும்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கு வளவாளராகவும், நிறுவகத்தின் ஏனைய பணிகளில் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் மீயுயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கும், மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும், கல்விசார் சமூகத்துக்கும், பல தரப்பட்ட தொழில்வாண்மையாளர்களுக்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது. அத்தடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளிப்பதில் முக்கிய வகிப்பாகத்தில் அரும் பெரும் பணியாற்றிய நீதித் துறை சேவைகள் ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் திரு சிசிர ரத்னாயக்கவை இங்கு முக்கியமாக நன்றிபூர்வமாக குறிப்பிடுதல் வேண்டும்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தற்போது சர்வதேச நீதித் துறை பயிற்சி நிறுவனத்தின் (IOJT) உறுப்பினராக செயற்படுகின்றது. நீதித் துறை அலுவலகர்களுக்கு நீதி மற்றும் சட்டத் தகவல்களை பிரபலப்படுத்தும் அரம்பயா இணையத் தளத்திலும், மின்.நூலகமும் இன்று இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்குச் சொத்தமாக உள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம், தங்காலை ஆகிய மேல் நீதிமன்றங்களையும், பிரதம நீதியரசர் உத்தியோகபூர்வ மாளிகையும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துடன் தொடர்புபடுத்தும் காணொளி மாநாட்டு (video conferencing facility) வசதிகளையும், இலங்கை நீதிபதிகள் நிறுவகம் கொண்டுள்ளது. முதலாவது சர்வதேச தரவுகள் தளமான ‘‘மனுபத்திர’’ (Manupatra) எனும் பெயரில் இந்தியாவின் இணையத் தளத்தையும் நிறுவகம் கொள்வனவு செய்துள்ளதுடன், இந்த இணையத் தளத்தின் காரணமாக இந்திய உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம், அமெரிக்க ஐக்கிய குடியரசின் உச்ச நீதிமன்றம் ஆகியவை வழங்கிய வழக்குத் தீர்ப்புக்களையும், சகல மந்திரிகளின் வழக்குத் தீர்ப்புக்களுக்கு பிரவேசிப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது. இலங்கை நீதித் துறை பதவியணியினரைப் பயிற்றுவிக்கும் போதும், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு இலத்திரனியல் பயிற்றுவிப்புச் சாதனங்கள் உள்ளிட்ட பயிற்சி கையேடுகளை வழங்குவது தொடர்பில் அமெரிக்க ஐக்கிய குடியரசு / பெடரல் நீதி மையம், மலேசியாவின்

நீதிபதிகள் நிறுவகம், சிங்கப்பூர் நீதிபதிகள் நிறுவகம் மற்றும் இந்திய நீதிபதிகள் நிறுவகம் போன்றவை வழங்கிய உதவிகளை நிறுவகம் பதிவு செய்துள்ளது.

2015 ஜனவரி மாதம் கௌரவ நீதிபதி கே. ஸ்ரீபவன் அவர்கள் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதுடன், அதன் விளைவாக, அவர் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டார்.

தொடர்ச்சியான நீதித் துறைப் பயிற்சிகளின் ஊடாக நீதிபதிகளின் தொழில் தரத்தை உயர்த்துவதற்கு பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் கவனம் செலுத்தியதுடன், நீதிபதிகளுக்கு குடியியல் சட்டப் பிரிவில் பயிற்சிகளை நடத்துவதற்கு கௌரவ நீதிபதி டீ. பீ. வீரசூரியவை ஆலோசகராக நியமித்தார். இதைத் தவிர, மேல் நீதிமன்ற நீதிபதிகள், நீதித் துறை அலுவலகர் மற்றும் தொழில் நியாய சபையின் தவிசாளர்கள் ஆகியோருக்கு அத்தியாவசிய பயிற்சிகளை வழங்குவதற்கு கௌரவ நீதிபதி பீ. எச். கே. குலதிலக அவர்கள், கௌரவ நீதிபதி சலீம் மார்சூக் அவர்கள், கௌரவ நீதிபதி பீ. ஏ. ரத்னாயக்க அவர்கள், கௌரவ நீதிபதி சுரேஷ் சந்திர அவர்கள் மற்றும் கௌரவ நீதிபதி ஏ. டபிள்யூ. ஏ. சலாம் அவர்கள் போன்ற இளைப்பாறிய நீதிபதிகளுக்கு தயக்கமின்றி அழைப்பு விடுத்தார்.

பல்கலைக்கழக அறிஞர்கள், மருத்துவ வல்லுனர்கள், தொழிநுட்ப நிபுணர்கள், தடயவியல் விஞ்ஞானிகள், அறிவுசார் சொத்துச் சட்டம் தொடர்பான வல்லுனர்கள், வர்த்தக மற்றும் நிதித் துறை தொடர்பான வல்லுனர்கள் போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளவாளர்களின் அறிவையும், அனுபவத்தையும் நீதிபதிகளுடன் பரிமாற்றிக் கொள்ளுவதற்கு கௌரவ பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் அவர்களின் தலைமையின் கீழ் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அந்த அறிஞர்களுக்கு அழைப்பு விடுத்தது. இங்கு NATA சட்ட அமுலாக்கத்துக்கு அமைய ஐக்கிய குடியரசின் அரச திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் காசோலை மற்றும் பரிவர்த்தனைகள் அமைப்பின் கீழ் கொள்ளப்படும் வங்கிகள், கணனிக் குற்றங்கள் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்பம் போன்ற விடயங்கள் உட்சேர்க்கப்பட்டது. மேலும் தொழில் நியாய சபைகளின் தவிசாளர்களை இலக்கு வைத்து தூதர் வரப்பிரசாத சட்டம் மற்றும் அரச உரிமை தொடர்பில் பணிப்பட்டறை ஒன்றும் நடத்தப்பட்டது. கௌரவ பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் அவர்கள் இவ்வாறான பல பணிப்பட்டறைகளுக்கு தனிப்பட்ட ரீதியில் கலந்து கொண்டு அங்கு சிறப்புரை ஆற்றினார்.

நீதிபதிகளின் கையேடுகளை இற்றைப்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய கௌரவ நீதிபதியின் தலைமையில் ஒரு குழுவும், சாட்சி தொடர்பிலான தீர்ப்பாசனக் கையேட்டை இற்றைப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றத்தின் நீதிபதி பதவியை வகிக்கும் கௌரவ நீதிபதி ஒருவரின் தலைமையில் ஒரு குழுவும், கௌரவ பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் அவர்களின் தலைமையின் கீழ் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபை நியமித்தது. இக் கால கட்டத்திலேயே இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு செயலாளர், நூலக அதிபர், வன்பொருள் மற்றும் மென்பொருள் தொழிநுட்பவியலாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் சிலரும், விடுதிக் காப்பாளர், சாரதி ஒருவரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

அத்துடன் நீதித் துறை நிருவாகம் மற்றும் கணக்கியல் நடைமுறைகள் தொடர்பில் சட்ட பதிவாளர்களுக்கு பயிற்சி ஒன்றை வழங்குவதற்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நடவடிக்கை எடுத்தது. இதன் போது 143 சட்டப் பதிவாளர்களுக்கு ":நீதித் துறை நிருவாகம், தாபனக் கோவை மற்றும் நீதித் துறையின் கணக்கியல் நடைமுறைகள்" தொடர்பான 3 செயலமர்வுகள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் நடத்தப்பட்டது. மேலும், இதன் போது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் தொடர்பில் 53 காத்தி நீதிபதிகளுக்கான செயலமர்வு ஒன்றும் நடத்தப்பட்டது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த மனுபத்திர சட்ட தரவுத் தளத்தைத் (Manupatra Legal Database) தவிர, நிறுவகத்தின் நூலகத்துக்கு வெஸ்ட்லோ சட்டத் தரவுத் தளம் (Westlaw Legal Database) ஒன்றையும் விலை கொடுத்து வாங்கியது. இலங்கை நீதிபதிகள் நிறுவகம் கௌரவ உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் சகல நீதிபதிகளுக்கும், கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கும் தனிப்பட்ட கடவுச் சொற்களை வழங்கியது. கொழும்புக்கு வெளியே அமைந்துள்ள மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகள்

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஊடாக விடுத்த வேண்டுகோளை அடுத்து இரண்டு வார காலத்தினுள் ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் கொழும்புக்கு வெளியே அமைந்துள்ள அனைத்து நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கும் இந்த வசதி வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டம் மற்றும் லங்கா பெல் சொலியுஷன்ஸ் (பிரைவட்) லிமிடட் கம்பனி ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நீதிபதிகளின் நலனுக்காக ஆராய்ச்சி மற்றும் பல இணைப்பு வசதிகளுடன் கூடிய நீதிபதிகள் சட்ட தரவுத் தளம் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் அனுமதி வழங்கப்பட்டது. இந்தச் சட்ட தரவுத் தளத்தை மேம்படுத்துவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கும், ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டத்தின் ஒப்பந்தக்காரருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இந்தத் திட்டம் 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நீதி அமைச்சு, இலங்கை நீதிபதிகள் நிறுவகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டம் ஆகியவை இணைந்து செயற்படுத்தப்படும் செயற்திட்டமாகும். ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டத்தினால் ஆலோசகர்களாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய கௌரவ நீதிபதி, சட்டத்தரணிகள் மற்றும் சட்ட மாணவர்கள் ஏற்கனவே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். இலங்கை சட்ட அறிக்கைகள், புதிய சட்ட அறிக்கைகள், சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட அறிக்கைகள் மற்றும் ஸ்ரீஸ்காந்த சட்ட அறிக்கைகள் போன்றவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்புக்களை குறிப்பிடுவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் நீதி அமைச்சின், சட்டத்தரணிகள் சங்கத்தின் மற்றும் ஸ்ரீகாந்த சட்ட அறிக்கைகள் போன்றவற்றின் பதிப்புரிமையைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் 151 நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபையின் 30 தவிசாளர்கள் ஆகியோருக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தமை இக் காலத்தினுள் எட்டிய விசேட சாதனைகளில் ஒன்றாகும். இந்த வெளிநாட்டுப் பயிற்சிகள் புதுடில்லி சட்டக் கல்லூரி, இந்தியாவின் போபால் நகரில் அமைந்துள்ள தேசிய சட்டக் கல்லூரி மற்றும் மலேசியாவில் அமைந்துள்ள நீதி மற்றும் சட்டப் பயிற்சி நிறுவகம் ஆகியவற்றால் நடத்தப்பட்டன.

இக் காலகட்டத்தினுள் உயர் நீதிமன்றங்களில் கடமையாற்றும் அனைத்து நீதிபதிகள், நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள ஏனைய சகல நீதிபதிகள், மற்றும் தொழில் நியாய சபைகளின் தவிசாளர்கள் ஆகியோருக்கு 294 மடிக் கணனிகளை பகிர்ந்தளித்தமை கௌரவ பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் அவர்களின் தலைமையின் கீழ் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அடைந்த மற்றுமொரு சாதனையாகும்.இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய நிதி ஒதுக்கத்தில் இருந்து நீதி அமைச்சின் ஒத்துழைப்புடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் கணனிகளை கொள்வனவு செய்தது.

சிறுவர் தொடர்பான வழக்குகளில் தீர்ப்பளிப்பதற்காக மிகவும் நன்மை பயக்கும் அத்தியாயங்களையும், வழிகாட்டல்களையும் மேம்படுத்தும் நோக்குடன், மேற் கூறப்பட்ட குழுக்களின் கலந்துரையாடல் தொடர், சர்வதேச அமைதி மற்றும் சட்டத்தின் இறைமை தொடர்பான மெக்ஸ் பிலெனக் மன்றத்தின் (Max Planck Foundation with International Peace and the Rule of Law) ஒத்துழைப்புடன், மேல் நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், சட்ட வைத்திய அதிகாரிகள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலகர்கள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலகர்களின் பங்குபற்றலுடன் நிகழ்நிலை தொழிநுட்பத்தின் வாயிலாக நடத்தப்பட்டது.

2. **இலக்குக் குழுக்களின் கலந்துரையாடல் - இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கான பயிற்சித் தேவைகளின் பகுப்பாய்வு**

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் விடயப் பரப்பை மேம்படுத்துவதற்காக, மேற் கூறப்பட்ட குழுக்களின் கலந்துரையாடல் தொடர், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய குடியரசின் முகவர் நிறுவனத்தின் மத்திய நீதித் துறை திட்டத்தின் (USAID Core Justice Program) ஆதரவுடன், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அலுவலகர்கள் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடத்தப்பட்டது.

**3. கணனிக் குற்றங்கள் மற்றும் இலத்திரனியல் ஆதாரங்கள் தொடர்பான தேசிய நீதித் துறை பயிற்றுவிப்பாளர்களின் இரண்டாவது கூட்டம் - 2020 நவம்பர் மாதம் 17 ஆம் திகதி**

நிகழ்நிலை தொழிநுட்பத்தின் வாயிலாக நடத்தப்பட்ட இந்த நிகழ்நிலை மாநாடு, Council of EuropeGLACY+ Project திட்டத்தினால் 2020.11.17 ஆந் திகதி நிகழ்நிலை தொழிநுட்பத்தின் வாயிலாக நடத்தப்பட்டது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் நடத்தப்பட்ட இந்த மாநாட்டுக்கு உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளான கௌரவ விஜித குமார மலல்கொட, கௌரவ பிரீதி பத்மன் சூரசேன மற்றும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கற்கைகள் தொடர்பான இணைப்பாளரும் கலந்து கொண்டார்.

**4. கொவிட் - 19 தொற்றுப் பரவல் நிலவிய காலத்தினுள் குறுகிய கால டிஜிட்டல் சேவை தீர்வு.**

இந்தத் திட்டம், உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் கௌரவ நீதிபதிகளின் பங்குபற்றலுடன், கௌரவ பிரதம நீதியரசர் மற்றும் கௌரவ நீதி அமைச்சர் ஆகியோரின் தலைமையில் 2020.11.25 ஆந் திகதி இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின்

கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

கொவிட் - 19 தொற்றுப் பரவல் நிலவிய காரணத்தால் 2020 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை எதிர்பார்த்த வண்ணம் நிறைவு செய்ய முடியாமல் போனதால், இந்தத் திட்டம் 2021 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டது. அத்துடன் சேவையில் ஈடுபட்டுள்ள நீதிபதிகளுக்காக நிகழ்நிலை பயிற்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு முகாமைத்துவ சபை அனுமதி வழங்கியது.

## கணக்கியல் கோட்பாடு

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் தத்துவங்களுக்கு இணங்க இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கணக்காளரால் பரிந்துரைக்கப்பட்ட கணக்கியல் நியமங்களின் அடிப்படையில் குறித்த நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை.

| விபரங்கள் | குறிப்பு | 2020 | | 2019 - மீளக் குறிப்பிடப்பட்ட |
|---|---|---|---|---|
| | | ரூபா. சதம் | ரூபா. சதம் | ரூபா. சதம் |
| **<u>சொத்துக்கள்</u>** | | | | |
| மீண்டுவராத சொத்துக்கள் | 3 | | 5,613,989.08 | 16,372,613.88 |
| சட்ட தரவுத் தளம் | | | 3,517,995.00 | 3,517,995.00 |
| **<u>மீண்டுவரும் சொத்துக்கள்</u>** | | | | |
| தொகை (அலுவலக எழுதுபொருட்கள்) | | 702,871.95 | | 796,747.20 |
| நிச்சயமற்ற கணக்குகள் | 4 | 7,142,089.51 | | |
| காசும், காசுக்கு சமமானவையும் | 5 | 324,862.48 | | 7,455,281.17 |
| | | | 8,169,823.94 | 8,252,028.37 |
| | | | 17,301,808.02 | 28,142,637.25 |
| **<u>நிதியிடல் செய்யப்பட்டது முதலீடுகளும் பெறுவனவுகளும்</u>** | | | | |
| முதலீடு வழங்கல் | | 18,705,843.70 | | 18,305,662.20 |
| ஒதுக்க நிதியம் | 6 | 6,846,692.14 | | 17,198,480.67 |
| கழிக்க – ஆண்டினுள் குறைபாடு | | (10,614,763.11) | 14,937,772.73 | (10,630,888.53) |
| | | | | 24,873,254.34 |
| **<u>மீண்டுவரும் பற்றுக்கள்</u>** | | | | |
| கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஒதுக்கீடு | | 658,752.00 | | 560,445.00 |
| முத்திரைக் கட்டணங்களுக்கான ஒதுக்கீடு | | 1,850.00 | | 2,300.00 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 7 | 888,915.00 | | 741,536.00 |
| திரட்டப்பட்ட செலவினங்கள் | 8 | 362,369.93 | | 498,032.92 |
| இதர கொடுப்பனவுகள் | 9 | 439,711.34 | 2,364,035.29 | 1,467,068.99 |
| அலுவலகக் குழுக்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் | | 12,437.02 | | |
| | | | | 3,269,382.91 |
| | | | 17,301,808.02 | 28,142,637.25 |

இலங்கை நீதிபதிகளின் நிறுவகத்தின் நிதி அறிக்கை இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
பக்க இலக்கம் 5 மற்றும் 6 இல் காட்டப்படும் கணக்கியல் கோட்பாடும் பக்க இலக்கம் 8 முதல் 13 வரை காட்டப்படும் குறிப்புக்கள் போன்றவை இந் நிதி அறிக்கைகளுக்கு அவசியமான அம்சங்களாகக் கருதுதல் சாலச் சிறந்தது.

ஒப்பம் இட்டது /கையொப்பம்
யூ. வீ. ஆர். ராஜகருணா
கணக்காளர்
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்.

ஒப்பம் இட்டது /கையொப்பம்
கௌரவ டி. எப். எச். குணவர்த்தன
பதிற் கடமை பணிப்பாளர்,
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயற்திறன் அறிக்கை

| | குறிப்பு | 2020 | | 2019 மீளக் குறிப்பிடுதல் |
|---|---|---|---|---|
| | | ரூபா. சதம் | ரூபா. சதம் | ரூபா. சதம் |
| <u>வருமானம்</u> | | | | |
| மீண்டுவரும் ஏற்பாட்டு பெறுகைகள் | 10 | 15,112,014.85 | | 68,985,443.90 |
| சேமிப்புக் கணக்கிலிருந்து பெறப்படும் வட்டி | | 11,670.82 | | 11,659.63 |
| பிற்போடப்பட்ட வருமானம் | | - | | 11,422.03 |
| அரசாங்க மானியக் கடன்களைத் தீர்த்தல் | | - | | 177.97 |
| நிழற்பட பிரதிகள் வருமானம் | | - | | 7,632.74 |
| இதர வருமானம் | 11 | 38,710.00 | | 9,009.00 |
| ஏல விற்பனை | | | 15,162,395.67 | 69,025,3336.27 |
| <u>மொத்த வருமானம்</u> | | | | |
| **<u>கழிக்க : செலவினம்</u>** | | | | |
| **<u>சம்பளம், கூலி மற்றும் ஊழியர் நலன்கள்</u>** | | | | |
| சம்பளம் மற்றும் கூலி | 12 | 5,988.627.48 | | 5,743,871.54 |
| ஊழியர் சேமலாப நிதியத்தின் செலவினம் | | 616,273.28 | | 541,044.58 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய செலவினம் | | 154,068.31 | | 135,261.15 |
| அலுவலகக் குழுக்களை பயிற்றுவித்தல் | | 12,000.00 | | 145,500.00 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | | 97,412.27 | | 299,101.16 |
| இணைப்புக் கொடுப்பனவுகள் / தொழில் சார் கொடுப்பனவுகள் | | - | | 81,000.00 |
| பிற கொடுப்பனவுகள் | | 105,984.71 | | 4,000.00 |
| பணிக் கொடை | | 147,379.00 | | 197,981.60 |
| | | | 7,121.745.05 | 7,147.760.03 |
| <u>செயற்பாட்டு நடவடிக்கைகள்</u> | | | | |
| மாநாடு மற்றும் பயிற்றுவிப்புச் செலவுகள் | 13 | 1,340,569.00 | | 11,891,900.82 |
| வெளிநாட்டு பயிற்சித் திட்ட செலவினங்கள் | 14 | 557,567.94 | | 41,066,377.13 |
| மாநாடு மற்றும் ஏனைய செயலமர்வுகளுக்கான தேநீர் விருந்துபசார செலவினங்கள் | | - | | 171,366.00 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | | 1,143,865.41 | | 931,372.82 |
| வருடாந்த பங்களிப்புத் தொகை கட்டணம் | 15 | 538,500.00 | | 314,125.00 |
| | | | 3,580,502.35 | 54,375,141.77 |
| <u>விநியோகம் மற்றும் பாவனை செய்த நுகர்வோர்</u> | | | | |
| செய்தித் தாள் விநியோகம் | | | | |
| தபால் கட்டணம் | | 14,240.00 | | 29,275.00 |
| அலுவலக எழுதுபொருள் செலவுகள் | | 115,580.25 | | 310,421.50 |
| அச்சீட்டு செலவினங்கள் | | 783,937.60 | | 153,900.00 |
| எரிபொருள் | | 105,903.00 | | 84,387.64 |
| இதர சேகைள் விநியோகம் | | 203,575.39 | | 852,549.68 |
| | | | 1,223,236.24 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 1,430,533.82 |
| நிதிச் செலவினங்கள் வங்கிக் கட்டணங்கள் | | 4,250.00 | 4,250.00 | 3,750.00 |
| <u>இதர செலவினங்கள்</u> | | | | |
| பிரயாணச் செலவுகள் | | 1,968.29 | | 31,440.82 |
| வாகனப் பராமரிப்பு | | 40,438.26 | | 71,661.71 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு | 16 | | | |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | | 522,188.54 | | 594,069.13 |
| | | 5,545.00 | | 86,890.00 |
| கணனி பராமரிப்பு | | - | | - |
| தொலைபேசி மற்றும் வலைத்தள கட்டணங்கள் | | 520,860.58 | | 1,163,842.23 |
| சுத்திகரிப்புச் செலவினம் | | 656,200.00 | | 613,161.00 |
| மின்சாரம் மற்றும் நீர் விநியோகச் செலவுகள் | | 546,111.17 | | 795,109.44 |
| ஆதனங்கள், வளாகம் மற்றும் உபகரணங்களின் தேய்மானம் | 17 | 11,158,806.30 | | 12,983,494.85) |
| கணக்காய்வு கட்டணங்கள் | | 395,307.00 | | 359,370.00 |
| | | | 13,847,425.14 | |
| <u>மொத்தச் செலவினம்</u> | | | | 16,699,039.18 |
| | | | 25,777,158.78 | 79,656,224.80 |
| திரட்டப்பட்ட நிதியத்தின் மிகை (பற்றாக்குறை) | | | **(13,847,425.14)** | (10,630,888.53) |

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வரைவு செய்யப்பட்ட நிதி பாய்ச்சல் அறிக்கை

| | குறிப்பு | 2020 | | 2019 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. சதம் | ரூபா. சதம் | | ரூபா. சதம் |
| <u>செயற்பாட்டு நடவடிக்கைகள்</u> | | | | | |
| <u>பெறுகை</u> | | | | | |
| அமைச்சினால் கிடைக்கப்பட்ட மீண்டு வரும் மூலதனம் | | 14,088,327.95 | | 68,201,934.46 | |
| கிடைத்த வட்டி | | 11,670.82 | | 11,659.63 | |
| வரவு செலவு ஒதுக்கீடு – 228 | | - | | - | |
| நன்கொடைகள் | | - | | - | |
| நூலக அபராதத் தொகை | | - | | - | |
| நிழற்பட பிரதிகள் வருமானம் | | - | | 7,632.74 | |
| கடந்த ஆண்டுக்குரிய காசோலை இரத்து | | 779,100.00 | | - | |
| தங்குமிட விநியோக வருமானம் | | - | | - | |
| chemonic intஇடமிருந்து கிடைக்கப் பெற்ற பணம் | | - | | - | |
| இதர வருமானம் | | 40,000.00 | | 9,000.00 | |
| சண்டிகார் சட்டக் கல்லூரி கொடுப்பனவுக்கான கையிருப்பு பணம் | | - | | | |
| இயக்கப்பாட்டு நடவடிக்கைகளினால் கையிருப்பு நிதிப் பாய்ச்சல் | | | 14,419,098.77 | | 68,230,226.83 |
| <u>கொடுப்பனவு</u> | | | | | |
| சம்பளம், கூலி மற்றும் பணியாளர் நலன்கள் | 18 | (6,919,313.96) | | (7,091,788.48) | |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் | 19 | (4,427,259.27) | | (54,122,903.02) | |
| விநியோக மற்றும் பயன்பாட்டு நுகர்வோர் | 20 | (3,052,504.72) | | (4,012,103.12) | |
| கடந்த ஆண்டுக்குரிய காசோலை இரத்து | | - | | 63,407.10(3,750.0 | |
| நிதிச் செலவினம் | 21 | (4,250.00) | | 0) | |
| முத்திரைக் கட்டணங்கள் | | (4,100.00) | | (4,425.00) | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் கையிருப்புப் பணத்தின் வெளிப் பாய்ச்சல் | | | (14,407,427.95) | | (65,171,662.52) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசுப் பாய்ச்சல்** | | | 11,670.82 | | 30,058,564.31 |
| **<u>நிதி நடவடிக்கைகளினால் கையிருப்புப் காசுப் பாய்ச்சல்</u>** | | | | | |
| முதலீட்டு மானியங்கள் பெறுகை | | 400,181.50 | 400,181.50 | 1,291,309.99 | 1,291,309.99 |
| நிதி நடவடிக்கைகளினால் கையிருப்பு காசுப் பாய்ச்சல் | | | | | |
| **<u>முதலீட்டு நடவடிக்கைகளினால் கையிருப்பு காசுப் பாய்ச்சல்</u>** | | | | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | 22 | (400,181.50) | | (11,600.00) | |
| சட்ட தரவுத் தளம் | | | | | |
| வட்டி வருமானத்தை மீள முதலிடுதல் | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **முதலீட்டு நடவடிக்கைகளில் தேறிய கையிருப்பு காசுப் பாய்ச்சல்** | | | (400,181.50) | | (11,600.00) |
| கையிருப்புப் பணம் மற்றும் கையிருப்பு பண தளும்பல்களின் நிகர அதிகரிப்பு | | | 11,670.82 | | 4,338,274.30 |
| தொடக்கக் காலப் பகுதியில் கையிருப்புப் பணம் மற்றும் கையிருப்புப் பணத் தளும்பல்கள் | | | 313,191.66 | | 3,117,006.87 |
| இறுதிக் காலப் பகுதியில் கையிருப்புப் பணம் மற்றும் கையிருப்புப் பணத் தளும்பல்கள் | | | 324,862.48 | | 7,455,281.17 |

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வரைவு செய்யப்பட்ட தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய அறிக்கை

| விபரம் | பங்களிப்பு மூலதனம் | ஏனைய ஒதுக்கங்கள் | திரட்டப்பட்ட மிகை (பற்றாக்குறை) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|
| | | | | |
| 2020.01.01 ஆந் திகதிக்கு நிலுவை | 18,305,662.20 | | 6,567,592.14 | 24,873,254.34 |
| | | | | |
| ஆண்டுக்காகக் கிடைக்கப் பெற்ற மூலதன மானியங்கள் | 400,181.50 | | - | 400,181.50 |
| முன்னைய ஆண்டு சரிசெய்தல் | - | | 279,100.00 | 279,100.00 |
| வருடத்தின் குறைவு (பற்றாக்குறை) | - | | (10,614,763.11) | (10,614,763.11) |
| 2019.12.31 ஆந் திகதிக்கு நிலுவை | 18,705,843.70 | - | (3,768,070.97) | 14,937,772.73 |

## முக்கியமான கணக்கியல் கோட்பாடுகள்

## 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

1. வேறு விதமாகக் குறிப்பிட்டுக் கூறப்படாவிடில் நிதி அறிக்கைகளில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து மதிப்புக்களும் இலங்கை ரூபாயில் காட்டப்படும்.

2. பணவீக்கக் காரணிகளில் சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

**தொகைகளின் மதிப்பு**

3. கடந்த கால செலவினங்களில் தொகை மதிப்புக் காட்டப்படுகிறது.

**பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

4. நிதி அறிக்கையினுள் இளைப்பாற்றல் பணிக்கொடைக்கான இலங்கை கணக்கியல் நியமங்களின் பிரகாரம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொறுப்புக்களுக்கு பொறுப்புக்களுக்காக வெளிவாரியான நிதியம் தயார் செய்யப்பட மாட்டாது.

**சொத்துக்களும் உபகரணங்களும்**

5. சொத்துக்களும், உபகரணங்களும் குறித்த அடிப்படையில் பின்வரும் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டு. திரட்டப்பட்ட தேய்வுகள் கழிக்கப்பட்டு, செலவினங்கள் அறிக்கை இடப்படும்.

**தேய்மானம்**

6. தேய்மானத்துக்கான ஏற்பாடுகள், அனைத்து சொத்துக்கள் மற்றும் உபகரணச் செலவினங்களின் மீது கணக்கிடப்படும். கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றை பாவனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய வாழ்நாளை மதிப்பிட்டு, சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்குள்ள தினத்தில் தேய்வாகும்.

நிலையான சொத்துக்களின் தேய்மானம் பின்வரும் விகிதங்களில் நேர்கோட்டு அடிப்படையில் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 20% |
| மரத்தளபாடங்களும் அவற்றை பொருத்துதலும் | 12.5% |
| நூலக நூல்கள் | 10% |
| கணனி உபகரணங்கள் | 25% |
| மின் உபகரணங்கள் | 20% |
| பென்ரி உருப்படிகள் | 12.5% |
| பயணப் பொதிகள் | 10% |
| இயந்திரங்கள் | 12.5% |
| | 12.5% |

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கை பற்றிய குறிப்பு

**01 ஆவது குறிப்பு – நிருவாக தகவல்கள்**

**அறிக்கையிடும் பொருள்**

அறிக்கையிடல் பொருள் என்பது 1985 இல 46 ஐக் கொண்ட இலங்கை நீதிபதிகள் நிறுவகச் சட்டத்தினால் கூட்டிணைந்த இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

**02 ஆவது குறிப்பு – தயார்படுத்தல் அடிப்படை மற்றும் ஏனைய கருத்திற் கொள்ளக் கூடிய கணக்கியல் கோட்பாடுகள்**

**தயார்படுத்தல் அடிப்படை**

- **உடன்பாட்டு அறிக்கை**

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிதி நிலை அறிக்கை, 2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயற்திறன் அறிக்கை, விநியோகிக்கப்பட்ட வணிக பங்குகளின் பெறுமதி மாற்றம் பற்றிய அறிக்கை மற்றும் நிதிப் பாய்ச்சல் அறிக்கை, 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு மற்றும் அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கியல் கோட்பாட்டு மற்றும் நிறுவகத்தின் நிதி அறிக்கை குறிப்பு, இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியமங்களுக்கு (SLPSAS) இணங்க முக்கியமான சகல அம்சங்களும்.

- **பயனுள்ள தொழிற்பாடு**

பயனுள்ள நிறுவனம் உள்ளதாகக் கருதி நிறுவகத்தின் நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருத்தல்.

- **கணக்கியல் கோட்பாடுகளின் உடன்பாடு**

நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சிற்சில நிலுவைகள் நிதி அறிக்கைகளை முறையாக முன்வைப்பதற்காக மீள சரிசெய்தல் / வேறுபாடுள்ள இலக்கங்களுடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- **நிதியாண்டு**

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதி அறிக்கை 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த பன்னிரண்டு மாத காலப் பகுதிக்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

- **புழக்கத்தில் உள்ள மற்றும் செல்லுபடியாகும் நாணயத்தில் அறிக்கையிடலை முன்வைத்தல்**

நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- **நிதி நிலை தொடர்பான அறிக்கையின் தினத்துக்கு பின்னரான நிகழ்வுகள்**

நிலுவை பத்திரங்களுக்கு பின்னான முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. உரிய சந்தர்ப்பங்களில் சரிசெய்யப்பட்டிருப்பதுடன், இல்லாதவிடத்தில் நிதி அறிக்கைகளில் போதியளவு கண்டறியப்பட்டள்ளன.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பிலான குறிப்புக்கள்

## 03 ஆம் குறிப்பு – சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் அட்டவணை

| செலவினம் | 2020 ஜனவரி மாதம் 01 ஆம் திகதிக்கு நிலுவை | ஆண்டின் சேர்மானங்கள் | ஆண்டின் வெளியேற்றம் | 2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிலுவை | 2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிலுவை |
|---|---|---|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 1,522,454.25 | - | - | 1,522,454.25 | 1,522,454.25 |
| மரத் தளபாடங்களும் பொருத்துதலும் | 3,056,725.30 | - | - | 3,056,725.30 | 3,056,725.30 |
| நூலக நூல்கள் | 6,952,926. 90 | 400,181.50 | - | 7,363,108. 40 | 6,952,926. 90 |
| கனனி உபகரணங்கள் | 44,659,012.49 | - | - | 44,659,012.49 | 44,659,012.49 |
| மின் உபகரணங்கள் | 1,364,437.73 | - | - | 1,364,437.73 | 1,364,437.73 |
| பென்ரி உருப்படிகள் | 121,858.33 | - | - | 121,858.33 | 121,858.33 |
| பயணப் பைகள் | 20,100.00 | - | - | 20,100.00 | 20,100.00 |
| இயந்திர சாதனங்கள் | 1,266,905.00 | - | - | 1,266,905.00 | 1,266,905.00 |
| | **58,964,420.00** | 400,181.50 | **-** | **59,364,601.50** | **58,964,420.00** |

| தேய்மானம் | 2020 ஜனவரி மாதம் 01 ஆம் திகதிக்கு நிலுவை | ஆண்டின் தேய்மானங்கள் | ஆண்டின் வெளியேற்றம் | 2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிலுவை | 2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிலுவை |
|---|---|---|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 1,522,454.25 | - | - | 1,522,454.25 | 1,522,454.25 |
| மரத் தளபாடங்களும் பொருத்துதலும் | 1,826,448.06 | 382,090.66 | - | 2,208,538.72 | 1,826,448.06 |
| நூலக நூல்கள் | 2,479,425.26 | 725,443.35 | - | 3,204,868.61 | 2,479,425.26 |
| கனனி உபகரணங்கள் | 34,876,400.30 | 9,782,612.19 | - | 44,659,012.49 | 34,876,400.30 |
| மின் உபகரணங்கள் | 1,271,383.05 | 93,054.68 | - | 1,364,437.73 | 1,271,383.05 |
| பென்ரி உருப்படிகள் | 75,411.65 | 15,232.29 | - | 90,643.94 | 75,411.65 |
| பயணப் பைகள் | 14,070.00 | 2,010.00 | - | 16,080.00 | 14,070.00 |
| இயந்திர சாதனங்கள் | 526,213.56 | 158,363.13 | - | 684,576.69 | 526,213.56 |
| | **42,591,806.12** | **11,158,806.30** | **-** | **53,750,612.42** | **42,591,806.12** |
| தேறிய கையேட்டுப் பெறுமதி | 16,372,613.88 | | | 5,613,389.08 | 16,372,613.88 |

**04 ஆம் குறிப்பு**
**நிச்சயமற்ற கணக்குகள்**

2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு கைப் பண காசேட்டின் நிலுவை 7,142,089.51 ரூபாய் ஆகும். எனினும் இந்த நிலுவை 2020 ஜனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னால் கொண்டு செல்லப்படவில்லை. ஆகையால் 2020 ஜனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு கைப் பண காசேட்டின் நிலுவை 0 ரூபாய் ஆகும்.
இந்த வேறுபாடு 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அறிக்கையிடப்பட்டதன் பின்னர், 2021 ஆம் ஆண்டில் செம்மைப்படுத்தப்பட்டது.
கைப் பண காசேட்டு நிலுவை நீதி அமைச்சுடன் பொருத்தம் செய்வதற்காக நிலுவை 2020.01.01 ஆந் திகதிக்கு முன் கொண்டு வராததுடன், வேறுபாட்டுக்கான காரணம் பின்வருமாறு காட்டப்படுகிறது.

| | |
|---|---|
| 2019.01.01 ஆந் திகதிக்கு ஆரம்ப கைப் பண காசேட்டின் நிலுவை | 2,815,474.84 |
| அமைச்சுக்கு அறிக்கையிடப்படாத நிழற்பட பிரதிகளின் வருமானம் | 7,632.74 |
| அமைச்சுக்கு அறிக்கையிடாத செலவினங்கள் | (308,534.63) |
| விரிவுரையாளர்கள் நிராகரித்தமையால் இரத்து செய்யப்பட்ட காசோலைகள் போன்றவை (2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மற்றும் செலவினங்கள், 2019 ஆம் ஆண்டில் இரத்து செய்த) | 130,678.78 |
| விரிவுரையாளர்கள் நிராகரித்தமையால் இரத்து செய்யப்பட்ட காசோலைகள் போன்றவை (2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மற்றும் செலவினங்கள், 2019 ஆம் ஆண்டில் இரத்து செய்த) | 63,407.10 |
| முற்பணங்களை செலுத்துதல் மற்றும் நாளொன்றுக்கான சார்பு பணத்தை மீள வழங்குதல். (நேரடி வைப்புக்கள்) | 1,749,848.45 |
| 2019 ஆம் ஆண்டில் CB இல் அறிக்கையிடப்படும் 2018 மூதலீட்டுப் பெறுகைகள் | 528,982.23 |
| அமைச்சுக்கு அனுப்பி வைத்த மீளப் பெறப்பட்ட காசோலைகள் - செலவினங்களாக கைப் பண காசேட்டில் சேர்க்கப்பட்ட மற்றும் அத்துடன் அமைச்சினால் மூதலீட்டுக்களில் இருந்து கழிக்கப்பட்டவை | 2,154,600.00 |
| | 7,142,089.51 |

**05 ஆம் குறிப்பு**
**பணமும் பணத்துக்கு சமமானவையும்**

| விபரம் | **2020** | **2019** |
|---|---|---|
| **டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இ.ரூ.** | **-** | 7,142,489.53 |
| நடைமுறைக் கணக்கு | 324,862.48 | 313,191.66 |
| சேமிப்புக் கணக்கு | 324,862.48 | 7,455,281.17 |

**06 ஆம் குறிப்பு**
**திரட்டப்பட்ட நிதி செப்பமிடல்**

| விபரம் | 2020 | 2019 |
|---|---|---|
| 2020/01/01 திகதிக்கு நிலுவை | 6,567,592.14 | 25,861,846.44 |
| 2018 மீண்டு வரும் ஏற்பாடுகளின் மூலதன ஒதுக்கங்களுக்கான ஒப்படைப்பு | - | (59,206.21) |
| தேய்மான சீராக்கம் - 2018 | - | (8,667,566.66) |
| 2019 எழுதிய காசோலைகளை இரத்து செய்தல் | 279,100.00 | 63,407.10 |
| 202012/31 திகதிக்கு நிலுவை | 6,846,692.14 | 17,198,480.67 |

**07 ஆம் குறிப்பு**
**பணிக் கொடைக்கான ஒதுக்கங்கள்**

| நியமனத் திகதி | சேவைக் காலம் | சேவைக் காலம் வருடத்தில் | பெயர் | பதவி | 2019.12.31 ஆந் திகதிக்கு நிகர சம்பளம் | ஒரு வருடத்துக்குரிய பணிக்கொடை ஒதுக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 2018.10.01 | 02 வருடமும் 02 மாதங்களும் 30 நாட்களும் | 2 | எச். எம். குமுதுனி மதுவந்தி | செயலாளர் | 65,100.00 | 65,100.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2017.06.01 | 03 வருடங்கள் 06 மாதங்கள் 30 நாட்கள் | 3 | டபிள்யூ. எம். எம். கருணாரத்ன | ஆராய்ச்சி அலுவலகர் | 62,490.00 | 93,935.00 |
| 2015.10.15 | 05 வருடங்கள் 02 மாதங்கள் 16 நாட்கள் | 5 | ஏ. டீ. ஜீ. குணதிலக | வன் பொருள் மற்றும் மென் பொருள் தொழிநுட்பவியலாளர் | 39,310.00 | 98,275.00 |
| 2015.10.15 | 05 வருடங்கள் 02 மாதங்கள் 16 நாட்கள் | 5 | கே. எல். ஏ. கசுன் தாரக பத்மசிறி | வன் பொருள் மற்றும் மென் பொருள் தொழிநுட்பவியலாளர் | 39,310.00 | 98,275.00 |
| 2016.06.27 | 04 வருடங்கள் 6 மாதங்கள் 4 நாட்கள் | 4 | எச். கே. டீ. எம் செனெவிரத்ன | விடுதிக் காப்பாளர் | 32,800.00 | 65,600.00 |
| 2016.06.27 | 04 வருடங்கள் 8 மாதங்கள் | 4 | ஆர். சானிகா லக்ஷானி | அலுவலகப் பணி உதவியாளர் | 33,550.00 | 67,100.00 |
| 2016.06.27 | 04 வருடங்கள் 8 மாதங்கள் | 4 | டபிள்யூ. ஏ. மேனகா பத்மசீலி | அலுவலகப் பணி உதவியாளர் | 33,550.00 | 67,100.00 |
| 2016.06.27 | 04 வருடங்கள் 8 மாதங்கள் | 4 | யூ. ஏ. நதீஷா சதுரங்கனி | அலுவலகப் பணி உதவியாளர் | 33,550.00 | 67,100.00 |
| 2006.01.01 | 14 வருடங்கள் | 13 | ஜீ. டப்ளியூ. ரஞ்சித் | சாரதி | 33,550.00 | 67,100.00 |
| | | | | | | 889,915.00 |

| | 2020 | 2019 |
|---|---|---|
| 2020/01/01 திகதிக்கு ஏற்பாடுகள் | 741,536.00 | 543,554.40 |
| 2020 ஆண்டுக்கான ஏற்பாடுகள் | 888,915.00 | 741,536.00 |
| ஆண்டுக்கான பணிக்கொடை கொடுப்பனவு செலவினம் | 147,379.00 | 197,981.60 |

**08 ஆம் குறிப்பு**
**திரட்டப்பட்ட செலவுகள்**

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட வேண்டிய ஆலோசனை கொடுப்பனவுகள் | 134,325.00 | 93,669.93 |
| செலுத்தப்பட வேண்டிய தொலைபேசி விலைப் பட்டியல் | 31,259.56 | 49,814.62 |
| செலுத்தப்பட வேண்டிய பாதுகாப்பு ஊழியர்களுக்கான கட்டணங்கள் | 138,810.37 | 138,810.37 |
| செலுத்தப்பட வேண்டிய சுத்திகரிப்புச் செலவினம் | 57,975.00 | 55,863.00 |
| செலுத்தப்பட வேண்டிய அச்சீட்டுச் செலவினம் | - | 153,875.00 |
| செலுத்தப்பட வேண்டிய மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | - | 6,000.00 |
| | 362,369.93 | 498,032.92 |

**09 ஆம் குறிப்பு**
**பிற கொடுப்பனவுகள்**

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட வேண்டிய நிருவகக் கட்டணங்கள் | 439,711.34 | 1,467,068.99 |

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்
2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கை தொடர்பிலான குறிப்புக்கள்

**10 ஆம் குறிப்பு**
**அரச மானியங்கள் பெறுகை 2020**

| | | 2019 |
|---|---|---|
| ஜனவரி | 2,700,000.00 | 3,216,482.23 |
| பெப்ரவரி | 1,000,000.00 | - |
| மார்ச்சு | 1,500,000.00 | 4,470,000.00 |
| ஏப்பிரல் | 1,000,000.00 | - |
| மே | 900,000.00 | 2,235,000.00 |
| ஜூன் | (735,796.02) | 370,100.00 |
| ஜூலை | 2,000,000.00 | 8,973,585.81 |
| ஆகஸ்ட் | 500,000.00 | 40,074,250.71 |
| செப்டம்பர் | 2,800,000.00 | 3,483,303.20 |
| ஒக்டோபர் | - | 21,736.20 |
| நவம்பர் | 1,500,000.00 | 6,880,000.00 |
| டிசம்பர் | 1,324,305.47 | (231,213.70) |

64,493,244.45

14,488,509.45

பிற்போடப்பட்ட வருமானங்களுக்கான செயற்பாடுகள் (11,600.00)

-

மூலதன ஒதுக்கங்களுக்கான செயற்பாடுகள் (1,291,309.99)

68,985,334.46

நீதி அமைச்சினால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்

மின்சாரம் மற்றும் நீர் விநியோக செலவினம் 795,109.44

பாதுகாப்புச் செலவினம் 477,575.73 -

15,112,014.85 68,985,443.90

**11 ஆம் குறிப்பு**
நானாவித வருமானங்கள்

நானாவித வருமானங்கள் 38,710.00 9,000.00

**38,710.00** **9,000.00**

**12 ஆம் குறிப்பு**
**சம்பளங்களும், ஊதியமும்**

நிரந்தர அலுவலகர் குழு - ஊழியர் சேமலாப நிதிய பற்றுக்கள் 5,134,500.62 4,405,101.61

ஆலோசகர் கொடுப்பனவுகள் - ஊழியர் சேமலாப நிதியம் அல்லாத பற்றுக்கள் 854,126.86 1,138,769.93

**5,743,871.54**

**5,988,627.48**

**9,000.00**

**13 ஆம் குறிப்பு**
**மாநாடுகள் மற்றும் பயிற்சிகளுக்கான செலவினங்கள்** 69,079.00

உள்நாட்டு பயிற்சிகளுக்கான தேநீர் மற்றும் இதர விருந்துபசார செலவினங்கள் 436,083.95

31,990.00

செயலமர்வுகள் மற்றும் உள்நாட்டுப் பயிற்சிகள் 5,170,316.87

1,239,500.00 6,285,500.00

எல் எல் எம் மீள் செலுத்தல் 1,340,569.00

11,891,900.82

**14 ஆம் குறிப்பு**

**வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| விமானப் பயணக் கட்டணங்கள் | - | 6,673,800.00 |
| பயணக் காப்புறுதி | - | 162,139.55 |
| நாளாந்த இடைநிலைக் கொடுப்பனவுகள் | 557,567.94 | 32,374,488.54 |
| நிறுவனக் கட்டணங்கள் | - | 1,801,862.85 |
| வெப்ப ஆடைச் செலவினங்கள் | - | 54,086.19 |
| | | 41,063,377.13 |

**15 ஆம் குறிப்பு**

**வருடாந்தப் பங்களிப்புத் தொகைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| வருடாந்தப் பங்களிப்புத் தொகை கட்டணங்கள் - லோ நெட் | 538,500.00 | 314,125.00 |

**16 ஆம் குறிப்பு**

**கட்டிடங்கள், இயந்திரப் பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றைப் பராமரித்தல்.**

| | | |
|---|---|---|
| இயந்திர சாதன சேவைகள் உடன்படிக்கை | 44,089.43 | 107,531.57 |
| உபகரணங்களை புதிப்பித்தல் மற்றும் மீள நிறுவுதல் | 106,224.23 | 104,362.58 |
| அச்சு இயந்திரங்களுக்கான டோனர் | 326,529.43 | 382,174.98 |
| கட்டிடப் பராமரிப்பு | 36,260.00 | - |
| தீ விபத்து தொகுதி | - | - |
| இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் தொலைபேசி வலையமைப்பு | 9,085.45 | - |
| | 522,188.54 | 594,069.13 |

**17 ஆம் குறிப்பு**

**PPE இக்கான தேய்மானம்**

| | | |
|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 725,443.35 | 283,847.44 |
| நூலக நூல்கள் | 382,090.66 | 694,310.66 |
| மரத் தளபாடங்களும் பொருத்துதலும் | 9,782,612.19 | 382,090.66 |
| கணனி உபகரணங்கள் | 93,054.68 | 11,164,753.12 |
| மின் காப்புறுதி | 15,232.29 | 272,887.55 |
| பென்றி உருப்படி | 2,010.12 | 15,232.29 |
| பயணப் பைகள் | 158,363.13 | 2,010.00 |
| இயந்திர உபகரணங்கள் | 11,158,806.30 | 158,363.13 |
| | | 12,983,494.85 |

**காசுப் பாய்ச்சல் பற்றிய குறிப்பு**

காசுப் பாய்ச்சல் அறிக்கை நேரடி முறையின் மேல் தயாரிக்கப்பட்டுள்ளது.

.

**18 ஆம் குறிப்பு**

**சம்பளங்களும், படிகளும் பணியாளர் நலன்களும்**

| | | |
|---|---|---|
| சம்பளங்களும் ஊதியங்களும் | 4,791,641.78 | 4,242,455.21 |
| ஆலோசனைக் கட்டணங்கள் | 813,121.79 | 1,134,000.00 |
| ஊழியர் சேமலாப நிதியச் செலவினம் | 1,027,122.12 | 976,553.79 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் செலவினம் | 154,068.31 | 146,483.07 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 87,375.25 | 362,821.41 |
| சீருடைக் கொடுப்பனவு | 4,000.00 | 4,000.00 |
| அலுவலகர் குழுவுக்கான பயிற்சிகள் | 12,000.00 | 145,475.00 |
| பண்டிகை முற்பணம் | - | 80,000.00 |
| இதர அலுவலகர் குழுவுக்கான கொடுப்பனவுகள் | 29,984.71 | - |
| 6,919,313.96 | | 7,091,788.48 |

**19 ஆம் குறிப்பு**

**செயற்பாட்டு நடவடிக்கைகள்**

| | | |
|---|---|---|
| மாநாடுகள் மற்றும் பயிற்சிச் செலவினம் | 31,990.00 | 5,606,375.82 |
| நீதிபதிகளுக்குச் செலுத்திய எல் எல் எம் கட்டணங்கள் | 1,239,500.00 | 6,285,500.00 |
| வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள் | 1,584,925.59 | 40,447,087.52 |
| மாநாடுகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளுக்கான தேநீர் விருந்துபசார செலவினம் | 69,079.00 | 171,366.00 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 666,289.68 | 875,848.68 |
| காணொளி மாநாட்டுக் கட்டணங்கள் | - | - |
| வருடாந்த பங்களிப்புத் தொகைக் கட்டணங்கள் | 538,475.00 | 314,100.00 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 297,000.00 | 422,625.00 |
| **4,427,259.27** | | **541,122,903.02** |

**20 ஆம் குறிப்பு**

**விநியோகம் மற்றும் பாவனை செய்த நுகர்வோர்**

| | | |
|---|---|---|
| செய்தித் தாள் விநியோகம் | | - |
| தபால் கட்டணங்கள் | 14,240.00 | 29,275.00 |
| அலுவலக எழுதுபொருட் கொள்வனவு | 21,705.00 | 467,100.00 |
| எரிபொருள் செலவினங்கள் | 105,903.00 | 84,387.64 |
| இதர சேவைகளும் விநியோகங்களும் | 03,575.39 | 852,499.68 |
| பிரயாணச் செலவினம் | 1,968.29 | 31,440.82 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு | 45,345.45 | - |
| வாகன பராமரிப்பு | ʋ40,438.26 | 71,661.71 |
| டோனர் விநியோகம் | - | 382,124.98 |
| அச்சீட்டு செலவினங்கள் | 937,812.60 | - |
| அலுவலக உபகரண பராமரிப்பு மற்றும் ஏனைய சேவைகள் | 476,743.09 | 211,794.15 |
| தொலைபேசி மற்றும் இணையக் கட்டணங்கள் | 539,415.64 | 1,143,080.14 |
| சுத்திகரிப்பு கட்டணங்கள் | 653,813.00 | 657,899.00 |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 11,545.00 | 80,840.00 |
| | **3,052,504.72** | **4,012,103.12** |

21 ஆம் குறிப்பு

**<u>நிதிச் செலவினம்</u>**

| | | |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 4,250.00 | 3,750.00 |
| | 4,250.00 | **3,750.00** |

**<u>22 ஆம் குறிப்பு</u>**

**<u>நிலையான சொத்துக்கள் கொள்வனவு</u>**

| | | |
|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | - | - |
| மரத் தளபாடங்களும் பொருத்துதலும் | - | - |
| நூலக நூல்கள் | 400,181.50 | 11,600.00 |
| கணனி உபகரணங்கள் | - | - |
| மின் உபகரணங்கள் | - | - |
| பென்றி உருப்படி | - | - |
| இயந்திர சாதனங்கள் | - | - |
| | 400,181.50 | **11,600.00** |

## சவால்கள்

இலங்கை நீதிபதிகள் நிறுவகம் தனது நீண்ட கால பயணப் பாதையில் சர்வதேச நீதிமன்றங்களில் பயிற்சிகளை பெற்றுக் கொள்ளுதல், ஏனைய சட்டக் கல்வி நிறுவகங்கள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய குடியரசின் நீதித் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் கூட்டாண்மைகளை கட்டியெழுப்புதல் போன்ற பல பாரிய வெற்றிகள் கைப்பற்றியுள்ளது.

ஆயினும், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முன் நிலவும் சில சவால்களை பின்வருமாறு சுட்டிக் காட்டலாம்.

- சகல அடிப்படை வசதிகளுடன் கூடிய நீதித் துறை நிறுவகம் ஒன்றை பேணிச் செல்வதற்கான தனி கட்டிடம் ஒன்றை பெற்றுக் கொள்வதன் பாரிய தேவை.
- தாமதமடையும் திணைக்கள நடைமுறைகள்.
- திட்டங்களைச் செயற்படுத்தும் போது எழும் நிதி வரம்புகள்

## நன்றி

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு வழங்கிய ஆதரவையும், ஒத்துழைப்பையும் பாராட்டி இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பின்வரும் நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

1. முகாமைத்துவச் சபை
2. நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் நீதி அமைச்சின் அலுவலகர் குழாம்
3. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் அதன் அலுவலகர் குழாம்
4. பொதுத் திறைசேரியின் செயலாளர் மற்றும் பொதுத் திறைசேரியின் அலுவலகர் குழாம்
5. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP)
6. கணக்காய்வு அதிபர் மற்றும் அவரது அலுவலகர் குழாம்
7. உயர் நீதிமன்ற பதிவாளர்
8. மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர்
9. மீயுயர் நீதிமன்றத்தின் மார்ஷல்
10. கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

திகதி – 2022 டிசம்பர் 08

பணிப்பாளர்,

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்களும், பிற சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் குறித்தான 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவுக்கு அமைய கணக்காய்வு நாயகத்தின் அறிக்கை.

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கை மற்றும் அன்றுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதி செயற்பாட்டு அறிக்கை, தேறிய சொத்துக்களின் மாற்ற அறிக்கை மற்றும் அன்றுடன் முடிவடையும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகளுக்கு ஏற்புடைய குறிப்புக்கள், முக்கிய கணக்கியல் கோட்பாடுகளின் சராம்சங்களையும் உள்ளடக்கிய 2020 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இல 38 ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது ஆணையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கை குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்கு வழக்குகள் தொடர்பிலான அரசியலமைப்பின் 154(6) சட்டத்தின் பிரகாரம் எனது அறிக்கை 2022 ஆகஸ்ட் 22 ஆந் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர, நிறுவனத்தின் 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலை மற்றும் அன்றுடன் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயற்பாடுகளும், காசுப் பாய்ச்சலும் இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியமங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலையை எடுத்துக் காட்டுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படை

(அ) மூலதன மானியங்கள் முறையானவாறு கணக்கு வைக்கப்பட்டிருக்காததுடன், கணக்கு வைக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கியல் தத்துவங்களும் வெளிப்படுத்தப்படாமை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை தொடர்பான கூற்று இலங்கை அரச பிரிவு கணக்கியல் நியம இலக்கம் 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய தயாரிக்கப்படாமை.

(இ) இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியம இலக்கம் 07 இல் 65 ஆவது பந்தியின் பிரகாரம் சொத்தின் தேய்மான பெறுமதி மற்றும் பயன்பாட்டு வாழ்தகு காலத்தை குறைந்த பட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் கால எல்லை முடிவடையும் திகதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பூச்சியப் பெறுமதியாக இருந்த ரூ. 3,327,855 ஆன நடைமுறையற்ற

சொத்துக்களின் மீள் கணக்கிடப்பட்டிருக்காமை. அதற்கமைய இந்த மதிப்பீடு செய்யப்பட்ட வலு இலங்கை அரச பிரிவுகளின் கணக்கியல் நியம இலக்கம் 03 இக்கு அமைய சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வு ஆண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 59, 364,602 ஆன நடைமுறையற்ற சொத்துக்களை கையப்படுத்திய திகதிகளுடன் கூடிய தேய்மான நிலுவையை உறுதிப்படுத்தும் அட்டவணை அல்லது நிரந்தர சொத்துக்களின் பட்டியல் கணக்காய்வு செய்வதற்கு சமர்ப்பிக்கப்படாமையால், அந்தச் சொத்துக்களுக்கு ஏற்புடையதாக கணக்கு வைக்கப்பட்ட பெறுமதி மற்றும் அதன் தேய்மான பெறுமதியான 11,158,806 ரூபாய் கணக்கெடுப்புக்களின் திருத்தத் தன்மையை உறுதிப்படுத்த இயலாமல் போனது.

(உ) 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 7,142,090 ரூபாய் காசேட்டின் நிலுவை மீளாய்வு ஆண்டின் ஆரம்ப நிலுவையாக காசேட்டில் கொண்டு வரப்படாததுடன், அது நிச்சயமற்ற கணக்கு நிலுவையாக நடைமுறைச் சொத்துக்களில் தீர்க்கப்படாமல் இருந்தது. ஆண்டு இறுதித் திகதிக்கு காசேட்டில் உள்ள அந்த மிகை தொகையை நேரடி அமைச்சுக்கு அனுப்பி திறைசேரிக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் இந்த நிச்சயமற்ற நிலுவை உருவானது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.கோ) அமைய நான் கணக்காய்வுகளை மேற் கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதி அறிக்கை கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் இது குறித்து மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படையை வழங்குவதற்கு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சிகள் போதுமானது என்பதும், உகந்தது என்பதும் எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவ மற்றும் நிர்வகிக்கத் தரப்பினரின் பொறுப்புக்கள்.

இந்த நிதிக் கூற்றானது இலங்கை அரச பிரிவுகளின் கணக்கியல் நியமங்களுக்கு அமைய தயாரித்தல், நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் போன்றவைகளின் காரணத்தால் ஏற்படக் கூடிய போதுமான தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளக நிர்வாகத்தை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பை பேணிச் செல்லக் கூடிய இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன், முகாமைத்துவம் நிறுவகத்தை முடிவுறுத்த கருதினால் அல்லது வேறு பதிலீடுகள் அல்லாத சமயத்தில் இயக்கத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதை விடுத்து தொடர்ச்சியான இருப்பை அடிப்படையாகக் கொண்ட கணக்கு வைத்தல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு ஏற்புடைய விடயங்களை கண்டறிதல் போன்றவைகளும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயற்தொடர் தொடர்பில் பரிசீலிக்கும் பொறுப்புக்கள், நிர்வாகத் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஏற்றவாறு சுய வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பற்றுக்கள் தொடர்பில் உரியவாறு கையெடுகளும் அறிக்கைகளும் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

## 1.4 நிதி அறிக்கை கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு.

பொதுவாக எடுத்துக் கொண்டோமாயின் நிதிக் கூற்றுக்கள் மோசடிகள் மற்றும் தவறுகளால் ஏற்படும் போதுமான பொய்யான கூற்றுக்கள் அற்றதெனும் நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கலான கணக்காய்வு அறிக்கையை வெளியிடல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்ட உறுதிப்படுத்தலான போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற் கொள்ளும் போது அது எப்போதும் போதுமான தவறான கூற்றுக்கள் கண்டறியப்படும் என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள், தனியாக அல்லது கூட்டான பாதிப்புக்களால் போதியளவான பொய்யான கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன், அங்கு போதியளவுத் தன்மை இந் நிதிக் கூற்றுக்களின் அடிப்படையாகக் கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீதான பாதிப்புக்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் அம்சமாக நான் கணக்காய்வின் போது தொழில் தர்மத்துக்கு ஏற்பவும், தொழில் ரீதியாக ஐயமின்றியும் செயற்பட்டுள்ளேன். மேலும் நான்

- மோசடி அல்லது தவறுகள் போன்ற காரணத்தால் நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய போதுமான தவறான கூற்றுக்கள் ஏற்படுத்தும் அபாயங்களை அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவற்றின் மூலம் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தினேன். தவறாகக் காட்டுவதன் காரணத்தால் ஏற்படக் கூடிய போதுமான பொய்யான கூற்றுக்களின் பாதிப்புக்கள், மோசடிகளால் ஏற்படக் கூடிய பாதிப்பு அவற்றின் பொய்யான ஆவண தயாரிப்பு, வேண்டுமென்றே தவறவிடுதல், தவறாகக் காட்டுதல் அல்லது உள்ளக நிருவாகத்தை தவிர்த்தல் போன்ற காரணங்களால் ஏற்படும் பாதிப்புக்களை விட பாரதூரமானதாகும்.

- உள்ளக நிருவாகத்தின் செயற்திறன் தொடர்பான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் நோக்கில் அல்லாத போதிலும், தகுந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்கு உள்ளக நிருவாகம் பற்றி புரிந்து கொண்டேன்.

- பாவனை செய்யும் கணக்கியல் தத்துவங்களின் ஏற்புடைமை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்துவம் போன்றவற்றில் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட இணைப்பு வெளிப்பாடுகளின் திருத்தத் தன்மையைப் பாராட்டினேன்.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர் இருப்பு குறித்தான போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்த கணக்கியலுக்கு நிறுவனத்தின் தொடர் இருப்பு தொடர்பான அடிப்படையை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு தீர்மானித்தேன். போதியளவு நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானம் எடுத்திருந்தால், நிதி அறிக்கைகளில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களில் கவனம் செலுத்த வேண்டியதுடன், அந்த வெளிபடுத்தல்கள் போதியளவாக அமையாது விடில், எனது கருத்தை புறந்தள்ள வேண்டும். ஆயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர் இருப்பு முடிவுறுத்தப்படலாம்.

- நிதி அறிக்கைகளில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களும், நிகழ்வுகளும் உகந்த மற்றும் நியாயமான முறையில் உட்சேர்க்கப்பட்டிருத்தலும், வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய மொத்த நிதி அறிக்கைகளை முன் வைத்தலும் பாராட்டக்குரியது ஆகும்.

கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வுகள், பிரதான உள்ளக நிருவாக பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் தொடர்பில் நிருவாகத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கு இணங்க, இந்த அறிக்கையில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்துக்கு அடிப்படையான பந்தியில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களின் கீழ் கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களையும், விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டதுடன், எனது பரிசீலனைகளில் இருந்து சரியான நிதி அறிக்கைகளை நிறுவகம் பேணிச் சென்றுள்ளதைக் காணக் கூடியதாக இருந்தது.

2.1.2 2018 இல 19 ஐக் கொண்ட கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (இ) (III) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடங்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன.

2.1.3 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (இ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய கடந்த வருடம் நான் வழங்கிய பரிந்துரைகள் நிதிக் கூற்றுக்களில் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றிய நடைமுறைகள் மற்றும் பெற்ற ஆதரங்களின் மீது மற்றும் போதியளவான விடய மட்டுப்பாடுகளினுள், பின்வருவனவற்றை தெரிவிக்கும் அளவுக்கேனும் எவையும் என் கவனத்துக்கு உட்படவில்லை.

2.2.1 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நிறுவனத்தின் நிருவாக சபையின் குறித்த உறுப்பினர் நிறுவனம் தொடர்பான ஏதேனும் ஒப்பந்தத்துக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக பொது வியாபார நிலைக்குப் புறம்பாக தொடர்பு இருப்பதாகவோ.

2.2.2 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர வேறொரு குறித்த எழுத்துருவான சட்டத்துக்கு அல்லது நிறுவனத்தின் நிருவாக சபையினரால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காதவாறு செயற்பட்டுள்ளதாகவோ

- 2003 ஜூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீர்டி 12 ஐக் கொண்ட அரச வியாபார திணைக்களத்தின் சுற்றுநிருபத்துக்கு அமைய 2019 ஆம் ஆண்டின் நிதி அறிக்கை 2020 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டிய போதிலும் நிதி அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்துக்கு 2021 நவம்பர் 11 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

2.2.3 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய நிறுவனத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள், மற்றும் பணிகள் போன்றவைக்கு இணங்காதவாறு செயற்பட்டிருப்பதாகவோ

2.2.4 2018 இல 19 ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நிறுவனத்தின் வளங்கள் சிக்கனமான முறையில், வினைத்திறனாகவும், பயனுள்ளவாறும் கால வரையறையினுள், ஏற்புடைய ஒழுங்கு விதிகளுக்கு இணங்க கொள்முதல் செய்யப்பட்டு பாவனை செய்யப்படவில்லை எனவும்

2.3 ஏனைய விடயங்கள்

---------------------------------

2016 ஆம் ஆண்டில் 3,517,995 ரூபாய் செலவிடப்பட்டு சட்ட தரவுத் தளம் ஒன்று தயாரிக்கப்பட்ட போதிலும், அதில் உள்ள குறைபாடு சீராக்கப்பட்டு இற்றைப்படுத்தப்படாமையால் அதனை பாவனைக்கு உட்படுத்தவில்லை.

டபிள்யூ. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்